
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து




சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 06 புதன்கிழமை (19.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

## மன்னார் வளைகுடாவைக் கண்காணிக்கும் நவீன ராடரை இந்தியா பொருத்தியது

(இராமேஸ்வரம்)

இந்தியாவிற்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் மற்றும் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்கில் மன்னார் வளைகுடாவை கண்காணிக்கும் நவீன ராடர் கருவிகளை இந்திய விமானப்படை பொருத்தியுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய தெற்குப் பிராந்திய கொமாண்டர் எயார் வைஸ் மார்ஷல் வை.ஆர்.ரானே இது தொடர்பாக விமானப் படையினருடனும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் மண்டபம் பிரதேசத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் தள்ளாடி இராணுவத் தளம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு நடத்திய கடும் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 14 படையினர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தள்ளாடிப் படைத்தளத்தை இலக்கு வைத்து கடந்த திங்கட்கிழமை இரவு 9.45 மணிமுதல் விடுதலைப் புலிகள் கடுமையான எறிகணை வீச்சு தாக்குதல்களை நடத்தியுள்ளனர். சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளின் எறிகணைகள் தள்ளாடிப் படைத் தளத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சனிக்கிழமை இரவு ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ மக்களின் புனிதத் தினமான ஈஸ்டர் வழிபாடுகளைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை இரவு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதாகப் பலாலிப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ஈஸ்டர் வழிபாடுகளைக் கருத்தில் கொண்டு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தப் பாதுகாப்புப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கைப் படையினர் விரைவில் கைப்பற்றுவர்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் வடக்கையும் விரைவில் கைப்பற்றுவர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கான பதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## கிழக்குப் பிரதம செயலராக பாலசிங்கம் பதவியேற்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக வி.பி.பாலசிங்கம் நேற்று முன்தினம் பொறுப்பேற்றார்.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரான வி.பி.பாலசிங்கம், வடக்குக் கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராகவும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பதவி (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவரினால் பொலிஸுக்கு ஆயுதம் கையளிப்பு

(கொழும்பு)

அதிரடிப் படை மற்றும் பொலிஸுக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான இராணுவ உபகரணங்களை வழங்கியிருக்கும் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக், இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுடன் படையினருக்குப் பயிற்சி வழங்குவது குறித்தும் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்ற இந் நிகழ்வில் அதிரடிப்படை மற்றும் பொலிஸாருக்கான இராணுவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அமெரிக்க அரசின் பயங்கரவாதத்திற்கு எதிரான உதவித் திட்டத்தின் கீழேயே இந்த இராணுவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2 இலட்சத்து 20 ஆயிரம் டொலர் (2 கோடியே 20 இலட்சம்) ரூபா பெறுமதிக்குரிய குண்டுவெடிப்புக்களின்போது ஆபத்தின்றித் தப்புவதற்கான (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மோதல்

(மன்னார்)

படையினர் மேற்கொண்ட முன்னகர்வுகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன. இதில் 4 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 15 பேர் காயமடைந்துள்ளனர்.

மன்னார் பாலைக்குழி மற்றும் இத்திக்கண்டல் பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இரவு 11.15 மணியளவில் படையினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுத் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை 2 மணிவரை தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தியதில் படையினர் பின்வாங்கினர். விடுதலைப்புலிகளின் இம்முறியடிப்புத் தாக்குதலிலும் மிதிவெடி, பொறிவெடிகளிலும்சிக்கி 2 படையினர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்துள்ளனர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

உள்ளே...
PC PARK (PVT) LTDஇன்
விளம்பரத் துண்டுப் பிரசுரம்
இன்றைய வலம்புரியுடன்
இணைக்கப்பட்டுள்ளது.

## நோர்வேத் தரப்பினர் வன்னி செல்ல அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களான நோர்வேயும் ஏனைய இணைத் தலைமை நாடுகளின் உறுப்பினர்களும் வன்னிக்குச் செல்வதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமைகள் நிலைமைகள் குறித்துப் பல்வேறு கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக இரண்டு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்று உறுப்பினர்கள் நேற்றுக் கொழும்பில் மேற்கொண்ட செய்தியாளர் மாநாட்டின்போது இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்து அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய 101 உறுப்பினர்களுக்குமான பதவியேற்பு நிகழ்வு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.


தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் (பிள்ளையான் குழு) (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் மட்டு.வில் வெள்ளத்தால் பாதிப்பு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் தாண்டியுள்ளது. மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 498 பேரும் மண்முனைப் பிரிவில் 4 ஆயிரத்து 514 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 13 பேரும் போரதீவுப் பற்று பிரிவில் ஆயிரத்து 667 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 577 பேரும் மண்முனை தென்எருவில் பற்றுப் பிரிவில் 8 ஆயிரத்து 895 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A' சித்தி பெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008





வரணி மகா வித்தியாலய மாணவன்





சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி.



மானிப்பாய் இந்துக் கல்லூரி




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவிகள்




சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்.

(தொடர்ந்து வரும்)

# மடு தேவாலயப் பகுதியில் புலிகளின் பிரசன்னம் இல்லை

## மன்னார் ஆயர் இராணுவத்திற்கு அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மடுமாதா தேவாலய வளாகத்துக்குள்ளோ அல்லது அதனை அண்மித்து அமைக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் முகாம்கள் பகுதிகளிலோ விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இல்லையென மன்னார் மறை மாவட்ட ஆயர் ராஜப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அந்தப் பகுதியிலுள்ள இராணுவ உயர் அதிகாரிக்கு மடு பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பாக விளக்கி அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மடு மாதா ஆலய வளாகத்திற்குள் விடுதலைப் புலிகள் அமைத்திருக்கும் ஆட்லறிதளம் அகற்றப்பட வேண்டுமென மன்னார் ஆயர் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இராணுவம் கூறியிருந்தது.

புனித ஸ்தலத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் அங்கிருந்து ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்துவதாக இராணுவம் குற்றம் சாட்டியிருந்தது. எனினும், இராணுவத்தினரின் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்திருந்ததுடன், மடுப்பகுதியில் தங்கியிருக்கும் பொது மக்களை இலக்கு வைத்து இராணுவத்தினரே ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்துவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே மன்னார் மடு தேவாலய வளாகத்திலோ அல்லது அதனை அண்மித்த முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளிலோ விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இல்லையென மன்னார் மறை மாவட்ட ஆயர் இராணுவத்தினருக்கு அறிவித்துள்ளார். (எ-5)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கியூடெக்-கரித்தாஸ்தேசிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் 'நான் தாகமாய் இருக்கிறேன்' தவக்காலப் போட்டி பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. (சி)

## உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் புதிய கட்டடத் தொகுதித் திறப்புவிழா சம்பந்தமாக முக்கிய தீர்மானங்களினை நிறைவேற்றுவதற்கான ஒன்றுகூடல் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கற்கையை பூர்த்தி செய்த பழைய மாணவர்கள் அனைவரும் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் ஆர்.ஏ.திலகரட்ணம் அறிவித்துள்ளார். (சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டான் கிராமத்தைச் சேர்ந்த எமது பாலர் பாடசாலையின் ஆசிரியை க.சுபாகினியின் அன்புச் சகோதரி,
**செல்வி கணேசன் -சுகிர்தா** அவர்கள்
2007-ம் ஆண்டு கணிதத் துறையில் 3A (க.பொ.த. உ.தரம்) அதிவிஷேட சித்தி பெற்று பொறியியல் துறைக்கு, பல்கலைக்கழகத்திற்கு தெரிவானதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.
"வளர்க"

நொத்தாரிஸ் தோட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

"வேலவன் பாலர் பாடசாலைச் சமூகம்"
"வேலவன் விளையாட்டுக் கழகம்"
(சி-878)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்தவரும், யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவரும், திருகோணமலை உயர் நீதிமன்றப் பதிவாளருமான **துரையப்பா சுரேந்திரன்** திருகோணமலை உயர் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

-அன்பர்கள் (951)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

கடந்த 25.12.2007 அன்று நடாத்தப்பெற்ற 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம்

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
காலம்:- 19.03.2008 புதன்கிழமை காலை 09.30 மணி

தலைவர்
**திரு.மு.செ.சரவணபவ**
(சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ்.மாநகர ஆணையாளரும்)

பிரதம விருந்தினர்
**திரு க.கணேஷ்**
(அரசாங்க அதிபரும்,மாவட்ட செயலாளரும் யாழ்.மாவட்டம்)

## நிகழ்ச்சிகள்

காலை 09.30 - வரவேற்புரை
திரு .இ.இரத்தினசிங்கம்
(செயலாளர் சைவசமய விவகாரக்குழு, செயலாளர் யாழ்.மாநகரசபை.)

09.35 - தலைமையுரை

09.40 - சிறப்புரைகள்
திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை -'மேன்மையுறும் சைவம்'
(பிரதம பரீட்சகர். சைவசமய விவகாரக்குழு, ஓய்வு பெற்ற அதிபர்)
திரு.கே.சண்முகலிங்கம் - 'பரீட்சையின் நோக்கம்'
(ஓய்வு பெற்ற அதிபர்)
திரு.ந.விஜயசுந்தரம் -'இன்றைய இளைஞர்களின் தேவை'
(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

10.10 - தனி நடனம் -'ஜதீஸ்வரம்'
(செல்வி பிரியவதனி ஜெயபாலன்,யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

- குழு நடனம்
(மாணவிகள், யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

10.40 - பரிசளிப்பு

12.00 - நன்றியுரை
திரு.து.சோமசுந்தரம்

சமய அறிவுப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் அதி விஷேட சித்தியையும் பெற்றவர்கள் அனைவரும் மேற்படி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாணம், மாநகராட்சி மன்றம்.**

(இ-005)

# இன்று ஒரு தகவல்

## மனித நம்பிக்கை

நம்பிக்கை இல்லாமல் இந்த உலகத்திலே நடமாடவே முடி யாது. நாம் நம்புவது நடக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். ஒரு லொத்தர் ரிக்கட் வாங்கும்போது நமக்கு முதல் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தானே வாங்குகிறோம். ஆனால் முடிவு வேறாக இருந்தாலும்மனம்தளர்ந்து விடுகிறோமா? தொடர்ந்து வாங்கிக்கொண்டுதானே இருக்கிறோம். ஒரு கடையிலே போய் சிற்றுண்டி அருந்துகிறோம். அதில் விஷம் கலந்திருக்குமா? நல்லது தானா? என்ற சந்தேகம் வந்தால் அதை எப்படிச் சாப்பிட முடியும்? நம் பித்தான் சாப்பிட வேண்டும். இந்த நம்பிக்கை தான் மனித வாழ்க் கைக்கு ஆதாரம்

ரயில் ஒழுங்காகப் போய்ச் சேரும்; என்ற நம்பிக்கையினாலே தானே ரயிலில் ஏறுகிறோம். கடிதம் ஒழுங்காகப் போய்ச்சேரும் என்ற நம்பிக்கையினாலே தானே தபாலை பெட்டியில் போடுகிறோம்.

மனித நம்பிக்கை எந்தளவுக்கு உறுதியாகவும் அறிவு பூர்வமாகவும் என்பதற்கு மகாவீரன் அலெச்சாண்டர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை உதராணமாகச் சொல்லலாம். இந்த உலகத்தையே வெற்றிகொள்ள வேண்டுமென்று புறப்பட்டார் அலெக்சாண் டர். ஒரு கட்டத்தில் சின்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அந்தச் சமயத்திலே அவருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டு விட்டது. அவருடன் வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் அவருக்கு வந்திருப்பது என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு மட்டுமே அதிகமாக வரக் கூடிய ஒரு வினோதமான நோயாக இருந்தது அது.

ஆனால் அவர் இருந்த இடம் அவருடைய எதிரியான பாரசீக மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட இடம் என்ன செய்யலாம் என்று அவரது படைத்தளபதிகள் யோசித்தார்கள். பாரசீக மன்னனின் அரண்மனை வைத்தி யரால் தான் அந்த நோயைத் தீர்க்க முடியும் எனத் தெரிந் தது.

எதிரியின் நாட்டிலே இருக்கிற வைத்தியரை எப்படி நம்பிக் கூப்பிட்டு வைத்தியம் பார்ப்பது என எல்லாரும் தயங்கினார்கள். ஆனால் அலெக்சாண்டர் தயங்கவில்லை. வைத்தியரை அழைத்துவாருங்கள் என்றார். வைத்தியர் வந்தார். அலொக்சண்டரின் உடம்பை பரிசோதித்துப் பார்த்தார். இந்த வியாதியைக் குணப்படுத்தி விடலாம். பயப்பட வேண்டியதில்லை. ஆனால் அதற்கு ஒரு மூலிகை ரசம் தயாரித்துக் கொடுக்க வேண்டும். நான் அதைத் தயாரித்துக்கொண்டு இரண்டு நாளில் வருகிறேன் என்று கூறிச் சென்ற வைத்தியர் அதேமாதிரி இரண்டாவது நாளில் மூலிகை ரசத்தோடு திரும்பிவந்தார்.

அதற்கிடையில் அலொக்சாண்டரின் தளபதி ஒருவன் அதில் விஷம் கலந்திருக்கிறது. குடிக்காதீர்கள் என எச்சரித்தான். அதைக் கேட்டும் அலெக்சாண்டர் கலங்கவில்லை. வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கி கடகடவெனக் குடித்துவிட்டார். குடித்து முடிந்ததும் தனது தளபதியின் எச்சரிக்கை பற்றி வைத்தியரிடம் கூறினார். வைத்தியர் திகைத்துவிட்டார். எதிரி நாட்டு வைத்தியனாக இருந்தும் அலெக்சாண்டர் தன்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை எண்ணிப் பெருமிதமடைந்தார். அப்பொழுது அலெக்சாண்டர் வைத்தியரைப் பார்த்து ''நம்பிக்கை என்ற அச் சாணியை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த உல கமே சுற்றிக்கொண்டிருக்கிறது. எனக்கு எதிரியாக இருந் தாலும் பாரசீக மன்னர் மிகப் பெரியவர்.

அப்படிப்பட்டவரது அரண்மனை வைத்தியர் நேர்மை இல்லாதவராக இருக்க மாட்டார். அப்படியிருந்தால் மன்னர் அவரை அரண்மனை வைத்தியராகவே வைத்திருக்க மாட்டார். எனது இந்த நம்பிக்கை வீனாகவில்லை'' என் றார் இது தான் மானுட நம்பிக்கை.

இந்தக் காலத்திலும் இந்த மானுட நம்பிக்கையை மிகவும் சாமர்த்தியமாகக் கையாளுகிற கெட்டிக்காரர்கள் சிலர் இருக்கிறார்கள். இந்தக் காலத்துக் குருவுக்கு ஒரு சிஷ்யன் ஒருநாள் குருமுன் பணிவாக நின்று ''குருவே! உங்கள் கையாலே விஷத்தைக் கொடுத்தாலும் அதை வாங்கி மடமடவெனக் குடித்துவிடுவேன் என்றான்.'' ''சிஷ்யா! உன் குருபக்தியை மெச்சினேன்'' என்றார் குரு. அதற்கு அந்தச் சிஷ்யன் ''அப்படி இல்லை குருவே! உங்களிடம் சிஷ்யனாக இருப்பதைவிட உங்கள் கையாலே விஷத்தை வாங்கிக்குடித்துவிடுவது மேல்! அதனாலே தான் அப்படிச் சொன்னேன்'' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உரிய விசாரணை நடாத்தப்படாமையே வன்முறை தொடர்வதற்கு காரணம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்



டுத்தாபனப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டுமென ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

உரிய விசாரணைகள் நடத்தப்படாததாலேயே வன்முறைகள் தொடர்வதாக அந்தக் கட்சி கூறியுள்ளது.

''அமைச்சர் ஒருவர் காடையர்களுடன் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய சமயமே அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எனினும் அதனைச் செய்யாமல் காடையர்களைப் பாதுகாப்பதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது'' என செவ்வாய்க்கிழமை பாராளு மன்றத்தில் விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணியாளர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்குத் தற்பொழுது பாதுகாப்பற்ற நிலை தோன்றியுள்ளது எனக் குறிப்பிட்ட விமல் வீரவன்ச, ரூபவா ஹினிக் கூட்டுத்தாபனப் பணியாளர்கள் தாக்கப்படுவதற்கான காரணத்தைக் கண்டறிந்து, அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து தண்டனை வழங்க வேண்டுமெனவும் இல்லாவிட்டால் இதனை சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை விடயத்துக்குள் சர்வதேசம் புகுந்துவிடுமென எச்சரிக்கை விடுத்தார். (அ-5)

# ரூபவாஹினித் தாக்குதலுக்கும் எனக்கும் தொடர்பில்லை - மேர்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் தாக்கப்படுகின்ற சம்பவத்துக்கும் தனக்கும் தொடர்பில்லையென தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா பாராளுமன்றத்தில் கூறினார். தன் மீது வீண்பழி சுமத்தப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் ரூபவாஹினிப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம யம் தான் இலங்கையில் இருக்க வில்லையெனவும் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்த அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலான குழுவினர் செய்திப் பணிப்பாளர் ரி. எம்.ஜி.சந்திரசேகரைத் தாக்கியிருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த பணியாளர்கள் அமைச்சரையும், அவருடைய குழுவினரையும் தாக்கியிருந்தனர். இதன் பின்னர் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஐந்து பணியாளர்கள் இனந்தெரியாத குழுக்களால் தாக்கப்பட்டிருந்தனர். இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தனர்.

இந்த நிலையில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கங்கள் பாரிய தொழிற்சங்கப் போராட்டமொன்றை நடத்தத் தயாராகியது. எனினும் குறிப்பிட்ட பணியாளர்களை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் அனுமதிக்கப் பொலிஸார் அனுமதி மறுத்ததுடன், கூட்டுத்தாபனத்தின் வளாகத்துக்குள் பெருமளவான பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தொழில்சங்க பிரதி நிதிகளை நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

தாக்குதல் சம்பவங்கள் குறித்து உரிய விசாரணைகள் நடத் தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுமென அவர் உறுதிமொழி வழங்கியிருந்தார். (அ-5)

# இராசிபலன்

*19.03.2008*
*(பங்குனி 06, புதன்கிழமை)*
*திரயோதசி முன்னிரவு 11.55மணிவரை*
*மகம் பின்னிரவு 03.04 மணிவரை*
*இராகுகாலம் 12.18-01.48 ம ணிவரை*
*சுபநேரம்-04.48-06.18 மணிவரை*
*பிரதோஷ விரதம்*

| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, தனவிரயம். |
| இடபம் | அற்பர் உறவு, ரோகபயம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |
| கடகம | மதிப்புக்குறைவு, பொருள்விரயம், காரிய தாமதம், ரோகபயம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம், புதியமுயற்சி. |
| கன்னி | உஷ்ணநிலை, பணவிரயம், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம். |
| துலாம் | தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும். |
| விருச்சிகம் | பெரியோர் உதவி, சுபநிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம். |
| தனுசு | உடல்உழைப்பு, அச்சமான நிலை, வயிற்றுக்கோளாறு. |
| மகரம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசனசுகம், அபகீர்த்தி. |
| கும்பம் | வாகனவசதி, அபூர்வ சந்திப்பு, பணவருவாய், முயற்சி கைகூடும். |
| மீனம் | சுகவாழ்வு, திடீர் பயணம், காரிய நன்மை, போசனசுகம். |

வளவன்

# மகேஸ்வரன் எம்.பி.படுகொலை வழக்கு சந்தேக நபரின் பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் படுகொலை தொடரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேக நபரான பிரான்ஸிஸ் சுதர்சனின் சார்பில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு கோரிக்கை கொழும்பு பிரதான நீதிவான் ரவீந்திர பிரேமரட்ணவினால் நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்றஉறுப்பினர்தி.மகேஸ்வரனின் படுகொலை வழக்கு விசாரணை கொழும்பு பிரதம நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே நீதிவான் இரண்டாவது சந்தேக நபரை பிணையில் விடுவிக்காது தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மகேஸ்வரனின் படுகொலை தொடர்பில் இரு பெண்கள் உட்பட ஐந்து சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் முதலாம் சந்தேக நபரான ஜொன்சன் கொலின் வெலன்டைன் இரண்டாவது சந்தேக நபரான பிரான்ஸிஸ் சுதர்சன் ஆகியோரை தவிர ஏனைய மூவரும் கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் வழக்கு விசாரணை நடைபெற்றது. வழக்கு விசாரணையின் போது இரு சந்தேக நபர்களும் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டனர். இதன்போது இரண்டாவது சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை மனு வொன்றை தாக்கல் செய்தார். இரண்டாவது சந்தேக நபர்பல வாரங்களாக தடுத்து வைக் கப்பட்டுள்ளதாகவும் அவரை பிணையில் விடுவிக்குமாறும் நீதி வானிடம் சட்டத்தரணி கோரினார்.

இதனையடுத்து இந்த படுகொலை வழக்கு விசாரணை இன்னமும் முழுமையாக முடிவடையவில்லை. இது குறித்து விசாரணை தொடர்கின்றது என்று கூறிய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் இரண்டாவது சந்தேக நபரை பிணையில் விடுவிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். இதனையடுத்து பிணை மனு கோரிக்கையினை நிராகரித்த நீதிவான் இரு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணையினை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (5)

# பாகிஸ்தானியர் 18 பேருக்கு பட்டை தீட்டும் பயிற்சி

(கொழும்பு)

வைரம் பட்டை தீட்டும் தொழிலில் பாகிஸ்தானுக்கு இலங்கை உதவுகிறது. இரு நாடுகளுக்கும் இடையே இத்தொழில் தொடர்பாக ஒப்பந்தம் கையெழுத்தானது. வைரம் பட்டை தீட்டும் தொழிலில் இலங்கை முன்னணியில் உள்ளது.

பாகிஸ்தானிலும் இத்தொழில் நடைபெறுகிறது. பாகிஸ்தானில் ஆண்டு தோறும் 40 மில்லியன் டொலர் மதிப்புள்ள நகைகளும் பட்டை தீட்டிய வைரங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பாகிஸ்தானைச் சேர்ந்த 18 பேர் இத்தொழிலில் சிறப்பு பயிற்சி பெறுவதற்காக இலங்கைக்கு வந்துள்ளனர். (அ-5)

## விண்ணப்பம் கோரல் தகவல் தொழில் நுட்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி (BIT) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. O/L தகைமை மட்டுமுள்ளவர்கள் Fit எனும் கற்கை நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் நேரடியாகவும் A/L 3 பாடங்கள் சித்தி உள்ளவர்கள் தெரிவுப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைவதன் மூலமும் கற்கை நெறிக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

விண்ணப்பப்படிவங்கள் இல. 324 பலாலி வீதியில் அமைந்துள்ள (MCS) நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என (MCS) நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

## ஊனமுற்ற அங்கத்தவர் உள்ள குடும்பத்துக்கு வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றவர்களைக கொண்ட குடும்பங்களுக்கான வீடமைப்புத்திட்டம் ஊனமுற்றவர் தேசிய செயலகம் மூலம் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான நன்கொடைக் கொடுப்பனவாக ரூபா 1 இலட்சம் வழங்கப்படுமென கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகனராஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊனமுற்றோர் குடும்பங்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு ரூபா 3000 வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நிதி தேசிய செயலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## கந்தரநுபூதிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கந்தரநுபூதிப் பெருவிழாவும், ஆலய இணையத்தள அங்குரார்ப்பணமும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆலய திருப்புகழ் மண்டபத்தில், ஆலய பரிபாலனசபைத்தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் சித்திர வேலாயுதப்பெருமானுக்கு விசேட பூஜையும், கந்தரநுபூதி கூட்டு வழிபாடும், அருணகிரிநாதர் திருவுருவப்படம் ஆலயத்தில் இருந்து திருப்புகழ் மண்டபத்திற்கு எழுந்தருளல் ஆகிய நிகழ்ச்சிகளுடன், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக்குருக்கள், சித்தாந்த பண்டிதர் சிவாகம கலாநிதி கு.ஜெகதீஸ்வர குருக்கள், மண்டுவில் இலஞ்சியாரணியம் அம்மன் ஆலய பிரதம குரு க.கிருபானந்தக்குருக்கள் ஆகியோரின் ஆசிரியுரையும் இடம்பெறும்.

தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவுகளும், இணையத்தள அங்குரார்ப்பணமும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புப் புள்ளிகள் பெற்ற ஆலய அடியவர்களான மாணவர்களைக் கௌரவித்தலும், திருப்புகழ், கானாமிர்த இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் இம் மாதம் 11ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரும் மஹோற்சவத்தில் நாளை வியாழக்கிழமை 10 மணிக்கு இரதோற்சவமும், 21ஆம் திகதி வெள்ளி காலை 7 மணிக்கு (1008) சங்காபிஷேகமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. 22ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ஓ)

## இலவச ஆங்கில வகுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட தென்மராட்சி பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் மீண்டும் இம் மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் நண்பகல் 12 மணிமுதல் 2 மணி வரை சாவகச்சேரி மகளிர்கல்லூரியில் நடை பெற உள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் 23டச்வீதி சாவகச்சேரியில் உள்ள லயன் எம்.பி. ஷண்முக நாதனிடம் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (ஓ)

# யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் 2007 டிசம்பர் 25ஆம் திகதி நடாத்தப்பட்ட 5 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சைவசமய விவகாரக்குழுவின் தலைவரும் யாழ்.மாநகர ஆணையாளருமான, மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் க.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் 'மேன்மையுறும் சைவம்' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபரும் சைவசமய விவகாரக்குழுவின் பிரதம பரீட்சகருமான மு.திருஞானசம்பந்தப்பிள்ளை, 'பரீட்சையின் நோக்கம்' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபர் கே.சண்முகலிங்கம், 'இன்றைய இளைஞர்களின் தேவை' எனும் தலைப்பில் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி செல்வி.பிரியவதனி ஜெயபாலனின் தனிநடமும், யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகளின் குழு நடனமும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும், அதிவிசேட சித்திகளையும் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெறும். மேற்படி பிரிவுக்குரியவர்கள் அனைவரையும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மாலை கட்டுதல் கோலம் போடல் போட்டி முடிபுகள்

அண்மையில் தென்மராட்சிப் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடை பெற்ற மாலை கட்டுதல், கோலம் போடல் ஆகிய போட்டிகளின் முடிபுகள் வருமாறு,

**மாலை கட்டல் பிரிவு 6,7**

முதலாம் இடம் :- கி.தனுசா -விடத்தல் பளை கமலாசனி வித்தியாலயம்.

இரண்டாம் இடம்:- க.நிசந்தினி-நாவற்குழி மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்:-வை.தினோபா -வரணி மகாவித்தியாலயம் அத்துடன் நா.கபிலன் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், ஜெ.அனித்தா உசன் இராமநாதன் மகாவித்தியாலயம். க.அனந்தா கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை ஆகியோர் சான்றுதழ்களைப் பெற்றுள்ளனர்

**கோலம் போடல் பிரிவு 8,9**

முதலாம் இடம்:-யோ.துசானி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

இரண்டாம் இடம்:சி.பாமினி மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

மூன்றாம் இடம் :-கே. கோகிலா மந்துவில் றோ.க.த.க. பாடசாலை மற்றும் யோ.கார்த்திகா குடம்மியன் அ.த.க.பாடசாலை அத்து டன் செ. நிசாந்தினி கச்சாய் அ.த.க.பாட சாலை, ஜெ.லோஜனா கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகியோர் சான்றிதழ்களையும் பெற் றுள்ளனர். (ஓ-29)

# உத்தியோகத்தர்கள் தன்மையுடன் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்

## உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

படிப்போ பதவியோ போதும் என்று கருதாது பொறாமை அற்ற போட்டித்தன்மையுடன் தமது ஆளுமையை வளர்த்து அதன் ஊடாக மக்களுக்கு சிறந்த சேவையை அளிக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் கொண்ட மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் பி. ஜோன்சன், சாவகச்சேரி நகர சபையில் கட்டப்பட்ட வாகனத் தரிப்பிடத்தை சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்தபின் சபை உத்தியோகத்தருடன் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , உத்தியோகத்தர்கள் மேலதிகமாக படிப்பதற்கோ, பயிற்சியைப் பெறுவதற்கோ தம்மால்இயன்ற வசதிகளைச் செய்து தருவதாகவும் அவற்றினை உள்ளூராட்சி சபைகள் ஊடாக கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

சபைச் செயலாளர் திருமதி. குணமணி தேவி ஆறுமுகம்தலைமையில்நடைபெற்ற கலந்துரையாடலின் போது பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. ம. வசந்தகுமார், வடக்கு மாகாணஉள்ளூராட்சிதிணைக்கள உதவிஆணையாளர் க.இராசையா ஆகியோரும் சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். உத்தியோகத்தர்களின் தேவைகளையும்அபிப்பிராயங்களையும்கேட்டறிந்து கொண்டார். (ஓ-29)

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

அரசாங்கம் பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரதமர் முகாமைத்துவ உதவி யாளர் கந்தையா முருகை யாவை முகாமைத்துவ உதவியாளர் அதி சிறப்புத்தரத்திற்கு பதவி உயர்த்தியுள்ளது.

பருத்தித்துறைப்பிரதேச செயலகர் நிர்வாக உத்தியோகத்தராக இவர் நிய மிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-52)




## பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் இடம்பெறும் என பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் கி.பூபாலன் தெரிவித்துள்ளார். (ஓ-19)

## திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்கழகத்தினால் இன்று பிற்பகல் 1 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் '2004 இல் நிகழ்ந்த சுனாமி தொடர்பான காணொளிப்பட பதிவுகளின் காட்சி' எனும் திரைப்படக் காட்சி நடாத்தப்பட உள்ளதாக யாழ். பல்கலைக்கழக புவியியல்கழக செயலாளர் அ.அன்ரன் கமிலாஸ் அறிவித்துள்ளார். (ஓ)

## பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய அதிபர் வே. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் கலந்து கொண்டு அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களை வழங்குவார்.

பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் ஆகியோருடன் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவும்கலந்து கொள்ளவுள்ளார். (ஓ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(அராலி)

அராலி தெற்கு கிழக்கு வடக்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் 23 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் வட்டுக்கோட்டை அராலி தெற்கு சம்மேளனத்தலைவர் கார்த்திகேசு நடராசா தலைமையில்நடைபெறஉள்ளது.

நிகழ்வில்தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி. சாவித்ரிதேவி குகனேசன் சிறப்புரை வழங்குவார். அத்துடன் 2008 ஆம் ஆண்டு காணி இடாப்புப்பதிவு மானிய உரம் வழங்கல் பற்றி ஆராய்தல் மற்றும் புதுவருட உத்தியோ கத்தர்கள் தெரிவு ஆகியன இடம் பெறவுள்ளது. (ஓ)

## விஞ்ஞான ஆய்வு கூடம் நீர்த்தாங்கி நிர்மாணம்

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் 30 இலட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடமொன்று நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது. இங்கு சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் நீர்த்தாங்கியொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இவ்வித்தியாலயத்திற்கு 15 கணனிகளையும், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு 25 கணனிகளையும் அன்பளிப்புச் செய்துள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-52)





நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் (23.02.2008 ஆம் திகதி) நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில், கல்லூரியின் பழைய மாணவரும், நீர்வேலி வாழைக் குலைச்சங்கத் தலைவருமான சி. சுந்தரலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சிவனேஸ்வரி குமாரசாமி , கல்லூரி அதிபர் இ.குணநாதன், நீர்வேலி றோ.த.க.பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் முதலாவது படத்திலும் கல்லூரி அதிபர் குணநாதனுக்கு பழைய மாணவரும், ஆசிரியருமான வ.சரவணபவானந்தன் சின்னஞ்சூட்டுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# திருகோணமலையில் இளைஞர்கள் கொலை விசேட அதிரடிப்படையினரே சுட்டனர்

## உயிர் தப்பியவர் சாட்சியம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினரே கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலையில் ஐந்து இளைஞர்களைக் கொன்றதாக சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்துள்ளார்

சம்பவத்தில் உயிர் தப்பிய கோகுலராஜ் பரராஜசிங்கம் செய்மதி மூலமான வீடியோ கலந்துரையாடல் ஊடாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்நிலையில் ஆஜராக இருந்தபோதும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பகிரங்கமாகக் கலந்து கொள்வதை அவர் தவிர்திருந்தார். இதனால் அவருடைய வாக்கு மூலம் சுயாதீனசர்வதேச நிபு ணர்கள் குழுவின் பிரதிநிதிஒருவர்மூலம வாசிக்கப்பட்டது.

கோகுலராஜ் பகிரங்கமாகவீடியோ கலந்துரையாடலில்கலந்து கொள்ளாமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது அவருக்கு உடலில் ஏற்பட்டிருக்கும் காயங்கள் மற்றது அச்சம் காரணமாக இலங்கையிலிருந்து வெளியேறி பிறிதொரு நாட்டில் தங்கியிருப்பதால் தொடர் ந்தும் அந்த அச்ச நிலை காணப்படுவதும் இரண்டாவது காரணம் என கோகுலராஜின் அறிக்கையை வாசித்த சுயாதீன சர்வதேச நிபுணர் டேவிட் சாவேஜ் தெரிவித்தார்.

'குண்டுத்தாக்குதலின் பின்னர் விசேட அதிரடிப்படையினரே எம்மைச் சுட்டனர் என டாக்டர் கூறினார். எனது உடம்பிலிருந்து 7 முதல் 8 வரையான குண்டுகளின் சன்னங்களை டாக்டர்கள் அகற்றியிருந்தார்கள். எனினும் பொலிஸாரோ அல்லது குற்றத் தடுப்புப் பிரிவினரோ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக என்னிடம எதுவும் கேட்க வில்லை' எனத் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கும் கோகுலராஜ் .

'குண்டுத் தாக்குதலின் பின்னர் விசேட அதிரடிப்படையினர் எம்மை ஒரு வாகனத்தில் இழுத்து ஏற்றிச் சென்று கடுமையாகத் தாக்கி பின்னர் வாகனத்தில் இருந்து தள்ளி விட்டு துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக உயிர்தப்பிய மற்றுமொரு நண்பர் என்னிடம் கூறினார்' எனத் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தை த்தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் தன்னையும் தனது நணபர்கள் சிலரையும் கொல்



வதற்கு முயற்சித்தால் நாட்டை விட்டு வெளியேறியதாக கோகுலராஜ் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அளித்திருக்கும் வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காயம் காரணமாக என்னால் எனது படிப்பைத் தொடர முடியவில்லை . பல்கலைக் கழகத்தில் கடுமையாகப் பாடுபடும் சாதாரண மாணவனாக இருந்த நான் தற்போது இரவு வேளைகளில் மோசமான கனவுகளால் அவதிப்படுகின்றேன் . கடுமையான மன அழுத் தம் மற்றும் மன உழச்சலுக்கு உள்ளாகியிருக்கும் நான்.நினைத்த வாழ்க்கையைவிட முற்றாக மாறுபட்டே தற்பொழுது வாழ்ந்து வருகின்றேன்' என கோகுலராஜ். தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம்திகதிஐந்து மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் பரராஜசிங்கம் கோகுலராஜ், யோகநாதன் பூங்குழலன் ஆகிய இருவருமே உயிர்பிழைத்தனர். இவர்கள் கதைத் துக் கொண்டிருந்த இடத்தில் முதலில் கைக் குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டிருந்தது.

'குண்டு வெடித்த பின்னர் எனது தலைக்குள் கூரிய பொருள் ஒன்று சென்றது.அதன் பின்னர். நான் எனது நினைவை இழந்தேன். இரண்டு மணித்தியாலங்களின் பின்னர். எனக்கு நினைவு வந்தபோது நான் வைத்திய சாலையில் இருந்தேன். எனக்கு அருகில் எனது நண்பரான பூங்குழலன் சிகிச்சை பெற்று வந்தார். எனது உடம் பிலிருந்து 4.5 லீற்றர் இரத்தம் இழக்கப்பட்டுவிட்டதாக டாக்டர்கள் கூறினார்கள். கிரனேட் சம்பவத்தில் நான் ஒருவன் தான் உயிர்பிழைத்ததாக நம்பினேன். பின்னர்தான் எனக்குத் தெரிந்தது என்னை துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள்' என கோகுலராஜின் வாக்கு மூலத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வாழ்ந்து வரும் முக்கிய சாட்சியங்கள் செய்மதி, வீடியோ, கலந்துரையாடல் மூலம்சாட்சிய மளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னர் அளிக்கப்பட்ட சாட்சியங்களை ஊடகங்கள் பகிரங்கமாகக் காண்பதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தது.

அத்துடன் சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவரான ஹேமச்சந்திரனின் தந்தையாரும் சாட்சியமளித்திருந்தார். (அ-5)

## ஆறு இராஜதந்திரிகள் புதிதாக நியமனம்

(கொழும்பு)

இலங்கையில்சேவை புரிவதற்காகநியமனம் பெற்றுள்ள ஆறு புதிய தூதுவர்களும் உயர் ஸ்தானிகர்களும் தமது நியமனக் கடி தங்களை திங்கட்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர். இது தொடர் பான வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பிரேஸில் தூதுவர் பெட்ரோ ஹென்ரிக்ஸ் லோப்ஸ் போரியோ ,உக்ரைன் தூதுவர் லுகார் போலிக்கா, பூட்டான் தூதுவர் சேரிங், டோர்ஜி பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கலா நிதி பீற்றர் ரீச்சட் ஹேய்ஸ், அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகர் கெத்தேகே குலுக்மான் , நைஜீரிய உயர்ஸ் தானிகர் லாவல் எம டஸ்டின் மா ஆகியோரே புதிதாக நியமனம் பெற்றுள்ள இராஜதந்திரிகளாவர். (அ-5)

## சம்பள முரண்பாடு தொடர்பில் மற்றுமொரு கலந்துயைாடல்

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது குறித்து மற்றுமொரு கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமால் பண்டார தெரிவித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் பெருமளவில்வெற்றியளித்துள்ளது என்றும் எதிர்காலத்தில் நடைபெறும் கலந்துரையாடல் மூலம் இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கிடைக்கப் பெறும் எனவும் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.(அ-7)

## முக்கியத்துவம் வாய்ந்த 270 தலங்கள் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம்!

(கொழும்பு)

புராதன முக்கியத்துவம் வாய்ந்த 270 ஸ்தலங்கள் அமைந்துள்ள பிரதேசங்களை பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தொல் பொருள் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நூறு ஆண்டுகளுக்கு மேல் 'பழைமை வாய்ந்தவையும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையுமான சிற்பங்கள், ஓவியங்கள், கட்டடங்கள் என்பன அமைந்துள்ள ஸ்தலங்கள் இவ்வாறு பாதுகாக்கப்படவுள்ளன. நாட்டின் எழு மாகாணங்களைச் சேர்ந்த 17 மாவட்டங்களில் தொல் பொருள் ஸ்தலங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தில் 48 ஸ்தலங்களும் மத்திய மாகாணத்தில் 55 ஸ்தலங்களும் சப்ர முகவ மாகாணத்தில் 34 ஸ்தலங்களும் ஊவா மாகாணத்தில் 42 ஸ்தலங்களும் வடமேல் மாகாணத்தில் 36 ஸ்தலங்களும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளன. அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 36 ஸ்தலங் களைப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-5)

# ஈழத்துப்புலமையின் சிகரமாகத் திகழ்ந்த சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

**இன்று சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் நினைவு தினம்**

செம்மொழியாம் தமிழ் மொழி இன்று உலகில் ஒரு சிறந்த இலக்கண இலக்கிய தொன்மை மிக்க வளச்செழிப்பு மிக்க மொழியாகத் திகழ்வதற்கு அவ்வப்போது தோன்றி தமிழ் வளர்த்த பெருமைமிக்க தமிழறிஞர் தாம் காரணமெனின் அதை யாரும் மறுத்துரைக்க முடியாது. இத்தகைய அறிஞர்கள் தமது பேச்சால் எழுத்தால் சொற்பொழிவுகளால் வாதத் திறமையால் ஆராய்ச்சியால் வேறு இன்னும் பல வழிகளில் எல்லாம் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தார்கள்.



தமிழ் மொழிக்கு வளம் சேர்த்ததமிழ்அறிஞர்களில் பல அறிஞர்கள் "பச்சிமப் புலவர்க்கான நகரம் எனவும் புலவர்கள் வாழ்ந்து ஒலித்தமையால் புலோலி எனவும் அழைக்கப்படும் புலோலியூரைச் சேர்ந்தவர்கள் என்றால் அது மிகையாகாது. மூதறிஞர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, சைவப்புலவர் சிவபாதசுந்தரனார் ஆகியோர் பல எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் அறிஞர்களையும் தோற்றுவித்து வருகின்றது.

சதாவதானி அவர்கள் தோற்றிய காலம் ஈழம் அந்நியராதிக்கத்திற்குட்பட்டிருந்த காலம் ஆங்கிலேயரின் அடக்கு முறையாட்சியில் தமிழ் மொழியும் சைவமும் வளர்ச்சி குன்றி சோபை இழந்து நலிந்து சென்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் உத்தியோக மோகம் காரணமாக ஆங்கில மொழியின் அவசியமும் கிறிஸ்தவ மிஷன்மாரின் கிறிஸ்தவமதப் பரப்புரைகளும் மக்களை உத்தியோகத்துக்காகவும் பகட்டு வாழ்க்கைக்காகவும் ஆங்கில மொழியின் மீதும் கிறிஸ்தவமதத்தின் மீதும் மோகங் கொள்ள வைத்தது. இந்த நிலையில் மேலைப் புலோலியில் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் மிக்க குடும்பத்தில் நாகப்பிள்ளை சிவகாமிபிள்ளை தம்பிகளுக்கு கதிரைவேலர் 1871ஆம் ஆண்டில் தோன்றினார். இவரின் பெற்றோர் சிறந்த முருக பக்தர்.தமிழ்பற்று, சைவப்பற்று மிக்க குடும்பத்தில் தோன்றியமையால் இயல்பாகவே தமிழும் சைவமும் அவருக்கு கை வந்த கலையாயிற்று. தந்தையார் சைவத் தமிழ் நூல்களை விற்பனையாளராகத் தொழில் புரிந்தமையும் அத்துறையில் அவரை ஈடு பாடு கொள்ளச் செய்ததெனலாம். கதிரைவேலர் இளமையில் ஆரம்பக்கல்வியை மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றார். பின்னர் அங்கேயே சிலகாலம் ஆசிரிய பணி புரிந்தார். தான்கற்றது கைமண்ணளவு தன்னும் இல்லை என்பதை உணர்ந்து மேலும் கற்க வேண்டுமென்று உந்தப்பெற்றுதமது இருபத்தி இரண்டாம் வயதளவில் தமிழகம் சென்றார்.

தமிழகம் சென்ற கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஆறுமுகநாவலரின் சீடரான காசிவாசி செந்திநாதையரிடமும் பெரியார் தி.த.கனக சிந்தரம்பிள்ளை அவர்களிடமும் தமிழ் இலக்கணம் இலக்கியம் வடமொழி தொல்காப்பியம் சங்க இலக்கியம் சைவசித்தாந்தம் போன்றவற்றையெல்லாம் துறைபோகக்கற்றது மட்டுமன்றி தனது இயல்பான ஆராய்வூக்கத்தால் பழந்தமிழ் , சைவ நூல்களையெல்லாம் ஆராய்ந்தும் கற்றும் புலமையெய்தினார். தமிழிலும் சைவத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றமையை அறிந்து ஆசிரியப்பணி அவரைத் தேடி வந்தது. தமிழகத்தில் சென்னை ஆயிரம் விளக்குபள்ளி , சென்னை சாந்தோம் கல்லூரி, வெஸ்லிக்கல்லூரி ஆகியவற்றில் தமிழ் ஆசிரியராகபணிபுரிந்த கதிரைவேற்பிள்ளை அவர்கள் மாணாக்கரின் நன் மதிப்புப் பெற்ற தலைசிறந்த ஆசானாகத் திகழ்ந்திருக்கிறார் என்பதற்கு அவரின் தலை சிறந்த மாணாக்கரான திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் சென்னை வெஸ்லிக்கல்லூரியில் அவரின் மாணாக்கராக இருந்த போது தன் குருவுக்காகத்தன் உயர்கல்வியைத் துறந்தார். நீதி மன்றம் சென்றது ஒரு நற்சான்று . தன் எதிர்காலமா? குருவா? என்ற வினாவுக்கு குருவே! எனச்செயலில் உரைத்த தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்கள் தமது குருவான சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களை 'என் பொருட்டன் றோ கதிர்வேல் யாழ்ப்பாணம் விட்டுச் சென்னை' போந்தது எனக் கசிந்து நகுவதைக் கணலாம்.அது மட்டுமல்ல 'செந் தமிழணங்கின் சிந்தையில் என்றும் தங்கும் தமிழொளித் துங்கவன்' எனப் போற்றிப் புகழ்ந்துரைக்கிறார்.இவையாவும் அவரின் நல்லாசிரியத்து வத்தின் மேன்மையை விளக்குகின்றது.

ஈழத்தில் இருந்து தமிழகம் சென்று தமிழ் வளர்த்தோர் வரிசையில் ஈழத்து பூதந்தேவனார், ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் என்று அடுத்து சதாவதானி கதிரைவேற்பிள்ளையவர்கள் இடம்பெறுகிறார். கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழகத்தில் சுப்பிரமணிய கான சபையை நிறுவி திருமுறை ஓதும்வழக்கத்தையும் அதற்கான விளக் கம் கொடுப்பதையும் பண்ணோடு பாடுவதையும் பழக்க முயன்றுள்ளார்கள் . புராண விரிவுரைகள் சைவச் சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார்கள். தாம் பிறந்த ஊரில் உள்ள புதுச் சந்நிதிக் கந்தனைப் புகழ்ந்து 'சுப்பரமணிய பராக்கிரமம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். அதனைவிட வைசசந்திரிகை, சிவாலய மஹோற்சவ விளக்கம். சைவ சித்தாந்த சுருக்கம் முதலிய நூல்களும் அவரது சமய பணியை விளக்குகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில் நலிந்து சென்ற சைவ சமயத்தை ஆறுமுகநாவலர் வழியில் தூக்கி நிறுத்தி புத்துயிர் பெறச் செய்துள்ளார்.

**கி.குகநாதன்,**
*தலைவர்,சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்.*

கதிரைவேற்பிள்ளை அவர்கள் தன்னுடைய சொற்பொழிவு, வாதங்களால் தனது புலமையை தமிழகத்தில் உள்ள தமிழக அறிஞர்களுடன் நிகழ்த்தி நிரூபிப்பதன் மூலம் உலகறிந்தவராகின்றார். அத்துடன் நின்றுவிடவில்லை.அவரது சைவப்பணி தமிழ்ப்பணி எல்லாவற்றிற்கும மணி முடியாய் திகழ்வது அவரது தமிழ் அகராதிப்பணி. இவரது அகராதி பற்றி அகராதி அனுவத்திலும் ஆராய்ச்சித் துறையில் நன்கு தேர்ந்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய 'தமிழும் அகராதியும்' எனும் கட்டுரையில் தெரிவித்து கருத்து ஈண்டுநோக்கற்பாவதும் ஆகும். அகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே வெகுகாலம் நின்று விட்டது. ஆனால் யழ்ப்பாணஅகரதி பல அச்சுப்பிழைகளுடன் வெளிவந்த வண்ணம் இருந்தது.இதற்கு விதிவிலக்காக நா.கதிரைவேற்பிள்ளை இயற்றி வெளியிட்ட அகராதியைக் கூறலாம்.

# ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படை வாபஸ் பெறவேண்டும் - ஹிலாரி

(வாஷிங்டன்)

ஈராக் போரில் அமெரிக்கா வெற்றி பெற முடியாது என்று ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் பதவிக்கு போட்டியிட விரும்பும் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

இந்த போர் காரணமாக அமெரிக்காவுக்கு ஒரு டிரில்லியன் டாலர் இழப்பு ஏற்படுவதுடன் மேலும் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதால் ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகளை வாபஸ் பெறவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க தொடங்கி ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக அமெரிக்காவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஹிலாரி கிளிண்டன் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக் மீதான போர் காரணமாக அமெரிக்க இராணுவத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கூறிய அவர், இதுவரை 4 ஆயிரம் படை வீரர்கள் உயிரிழந்திருப்பதுடன் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாக தெரிவித்தார். (அ-5)

# அமெரிக்க எண்ணெய்க் கப்பல் விபத்து -மாலுமிக்குத் தண்டனை

அமெரிக்காவில் எண்ணெய்க் கப்பலொன்று பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியமை தொடர்பில் அதன் மாலுமிக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சன்பிரான்சிஸ்கோ குடாவிலுள்ள பாலத்தில் குறிப்பிட்ட எண்ணெய்க்கப்பல் மோதியதால் 58பீப்பாய் எண்ணெய் கடலுக்குள் கசிந்துள்ளது.

கவனக்குறைவினால் ஏற்பட்ட இந்த விபத்தால் சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தை மீறிய குற்றத்தின் பேரில் கப்பல் மாலுமிக்கு 18 மாதகால சிறைத்தண்டனையும் 1 இலட்சம் அமெரிக்க டொலரும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற விபத்தில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினால் 2000 பறவைகள் வரை கொல்லப்பட்டமை மற்றும் அதனால் கலிபோர்னியா மாநிலத்தில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டமை என்பன குறிப்பிடத்தக்கது. (அ)

# திபெத்தியர் போராட்டத்தின் எதிரொலி எவரெஸ்ட் சிகரம் ஏறத் தடை

(காத்மாண்டு)

உலகிலேயே உயரமான சிகரமான எவரெஸ்டில் ஏறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திபெத் வழியாக எவரெஸ்ட் சிகரம் செல்ல சீனா தடை விதித்துள்ளது. அதுபோல் நேபாளம் வழியாகச் செல்ல நேபாளம் அரசும் தடை விதித்துள்ளது.

சீனாவின் வேண்டுகோளை ஏற்று நேபாள அரசு இத் தடையை அறிவித்துள்ளது.

திபெத்தியர்களின் போராட்டத்தை அடுத்து இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் சீனத் தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் திபெத்தியர்களால் பிரச்சனை ஏற்படுவதைத் தவிர்க்கவே இந்தத் தடை என்றும் கூறப்படு கிறது.

இதற்கிடையே, சீனாவை எதிர்த்து நேபாளத்திலும் திபெத்தியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காத்மாண்டுவில் உள்ள ஐ.நா. கட்டடம் எதிரே ஆயிரக்கணக்கான திபெத்தியர்கள் கூடி திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திபெத்தில் படுகொலையை நிறுத்து என்று அவர்கள் முழக்கம் எழுப்பினர். பொலிஸார் அவர்கள் மீது திடீரென தடியடி நடத்தினர். இதில் போராட்டக்காரர்களில் பலருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

'போராட்டம் அமைதியான முறையில் தான் நடைபெற்றது. நாங்கள் பொலிஸாரை அழைக்கவில்லை ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் தேவையில்லாமல் பலத்தை பிரயோகித்தனர்' என்று ஐ.நா. அலுவலகத்தில்உள்ள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-5)

# பாகிஸ்தான் பாராளுமன்றம் கூடியது சபாநாயகர் தேர்தல் இன்று நடக்கிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேர்தலுக்கு பிறகு புதிய பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது. புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு முன்னாள் சபாநாயகர் பதவி பிரமாணம் செய்து வைத்தார். புதிய சபாநாயகரையும் துணை சபாநாயகரையும் தேர்ந்து எடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறும்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உறுதி மொழி அகர வரிசைப்படி இடமளிக்கப்பட்டு இருந்தது. சபை கூடியதும் கொல்லப்பட்ட பெனாசீருக்காக சிறப்பு பிரார்த்தனை நடத்தப்பட்டது.

கடந்த முறை சபாநாயகராக இருந்த சவுத்ரி அமீர் உசேன் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார். 1973ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படி உறுப்பினர்கள் பதவி ஏற்றுக்கொண்டனர். உறுப்பினர்கள் பதவி ஏற்பு நேற்றும் நடந்தது. மொத்தம் உள்ள 344 உறுப்பினர்களில் 328 பேர் நேற்று முன்தினம் பதவி ஏற்றனர். மக்கள் கட்சி எம்.பி.க்கள் பெனாசீர் உருவப்படம் அச்சிடப்பட்ட சின்னம் அணிந்து இருந்தனர் கறுப்பு துணியையும் கட்டி இருந்தனர்.

பிரதமர் தேர்தல் எப்போதும் நடக்கும் என்பது தெரியவில்லை பிரதமர் பதவிக்கு சர்தாரியின் சகோதரி அஸ்ரா துணைத் தலைவர் பாகிம், சவுத்ரி அகமது முக்தார், யூசுப் ரசா கிலானி ஷா முகமது குரேஷி ஆகிய 5பேர்களின் பெயர்கள் பரிசீலணையில் இருப்பதாக மக்கள் கட்சியின் மூத்த தலைவர் நபீல் கபோல் தெரிவித்தார்.

### சர்தாரிக்கு உதவ பாகிம் உறுதி

இதேவேளை மக்கள் கட்சியின் துணைத் தலைவர் மக்தூம் அமின் பாகிம் நிருபர்களிடம் கூறுகையில் பிரதமர் பதவிக்கு சர்தாரி போட்டியிடுவதாக இருந்தால் அதற்கு நான் உதவும் முதல் ஆளாக நான் இருப்பேன் அவருக்கு ஆதரவு தருவேன் எனக்கு பிரதமர் பதவி கிடைக்காவிட்டால் நான் கட்சியை விட்டு வெளியேற மாட்டேன் என்று குறிப்பிட்டார்.

மக்கள் கட்சி தலைவரான சர்தாரியும் முஸ்லிம் லீக் தலைவரான நவாஸ் ஷெரீப்பும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை அவர்கள். பாராளுமன்றத்துக்கு சென்று பாராளுமன்ற நடவடிக்கைகளை கவனித்தனர். (அ-5)

# தற்கொலை தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் 5பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்டு மாநிலத்தில் புனரமைப்பு பணியில் நெதர்லாந்து இராணுவ வீரர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது தலிபான் அமைப்பின் தற்கொலை தீவிரவாதி ஒரு காரில் அங்கு வந்தார். அவர் அந்த காரை வெடிக்க செய்தார்.

இதில் 2 நெதர்லாந்து வீரர்கள் பலியானார்கள் மற்றும் ஆப்கானிஸ்தானியர்கள் 3பேர் பலியானார்கள். ஒரு இராணுவ வீரர் உள்பட மொத்தம் 8 பேர் காயம் அடைந்தனர்.

ஹெல்மாண்டு மாநிலத்தில் தான் உலகின் மொத்த கஞ்சா உற்பத்தியில் பாதிவிளைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பெண் தற்கொலைத் தாக்குதல் ஈராக்கில் 43 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள புனித கர்பாலா நகரில் பெண் மனித வெடிகுண்டு நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஏராளமான மசூதிகள் நிறைந்த முக்கிய சாலை முழுவதும் ரத்த வெள்ளம் காணப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சமீபத்தில் ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மிக மோசமானது என்று ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முகமது நபியின் பேரன் இமாம் உசேன் கடந்த 7 ஆம் நூற்றாண்டில் கொல்லப்பட்ட இடத்தில் அமைந்துள்ள வழிபாட்டு தளத்தின் அருகே கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் நுழைந்த பெண் மனித வெடிகுண்டு இந்த தாக் குதலை நடத்தியதாகவும் இதன் பின்னணியில் அல் கொய்தா அமைப்பு இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

## உலக தரிசனம்

அமெரிக்க துணை அதிபர் டிக் செனி மற்றும் குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர் ஜான் மெக்கைன் ஆகியோர் ஈராக் சென்றுள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே பாக்தாத்தில் சாலையோரம் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் அமெரிக்க படை வீரர்கள் இருவர் கொல்லப்பட்டனர். கடந்த 6ஆண்டுகளில் ஈராக்கில் 4 ஆயிரம் அமெரிக்க படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (அ-5)

# நன்றாகப் படிக்காததால் என் தாயார் என்னை இராணுவத்தில் சேர்த்தார்

## அதிபர் முஷாரப் பேட்டி

(இஸ்லாமாபாத்)

நான் படிக்கும்போது நன்றாக படிக்காததால் என் தாயார் என்னை இராணுவத்தில் சேர்த்தார் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இராணுவத்திலும் படிக்கவேண்டும் என்பது என் தாயாருக்கு தெரியாது என்று அவர் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது,

பதவி உயர்வுக்காக நான் யாரிடமும் சிபாரிசுக்கு சென்றது கிடையாது பாகிஸ்தானியர்கள் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள். புத்திசாலிகள். அவர்கள் பிரிவினைக்கு பிறகு நீண்ட தூரம் வந்து இருக்கிறார்கள். இருந்த போதிலும் அவர்களிடம் தலைமைக்குணம் இல்லை. நான் வெளிப்படையானவன். குடும்பத்தோடும் இராணு வத்தோழர்க ளோடும் அனைத்தையும் பகிர்ந்து கொள்வேன். என் மகன் பிலால் மகள் அய்லா உடன் என் உறவு நட்பு ரீதியிலானது. குழந்தைகளோடு நட்பு ரீதியாக இருக்கவேண்டும். அவர்களை வழி காட்ட வேண்டும். பயிற்சி அளிக்கவேண்டும் இவ்வாறு முஷாரப் கூறினார். (அ-5)

# குருட்டுத்தன்மையை குணப்படுத்தும் புரதம் அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

குருட்டுத் தன்மை ஏற்படக் காரணமான இரு பிரச்சினைகளை சீர் செய்யும் மருந்தொன்றை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். மேற்படி மருந்தானது பார்வை இழப்புக்கு வழிவகுக்கும் கண்ணிலான இரத்தக் குழாய் சிதைவதைத் தடுக்கக்கூடிய புரதத்தை செயலூக்கம் பெறச்செய்வதாக உதாஹ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆரம்ப கட்டமாக இம் மருந்தை எலிகளில் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கண்களிலுள்ள இரத்தக் குழாய்களிலுள்ள தசைகள் பலவீனமடைதல் மற்றும் நீரிழிவின் தாக்கம் என்பவற்றால் குருதிக் குழாய்கள் சிதைவடைவது வயதானவர்களில் காணப்படும் பொதுவான பிரச்சினைகயாகவுள்ளது என கூறும் இவ்விஞ்ஞா னிகள் இதன் காரணமாக கண்ணுக்குள் இரத்தம் கசிவடையவும் வழமைக்கு மாறான புதிய இரத்தக் குழாய்கள் உருவாகவும் வழியேற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் மேற்படி விஞ்ஞானிகளால் அடையாளங் காணப்பட்டுள்ள 'ரொபோ 4' புரதமானது இரத்தக் குழாய்களை உறுதியடைச் செய்வதிலும் அதன் செயற்பாட்டை சீர்ப்படுத்துவதிலும் முக்கிய வகிபாகம் வகிப்பதாகக் கூறப்படுகிறது. (அ-5)

# உலகிலேயே சுத்தமான நகரம் சுவிற்சர்லாந்தின் ஜூரிச்

(மாஸ்கோ)

ஐரோப்பிய நாடுகளில், வெளிநாட்டினரை உபசரிப்பதிலும் அவர்களுக்கு உதவுவதிலும் பின்தங்கியுள்ள நகரங்களில் முதலிடத்தில் உள்ளது பாரிஸ். அதற்கு அடுத்த இடத்தில் உள்ளது லண்டன். மூன்றாவது இடத்தை ரஷ்யாவின் மாஸ்கோ பிடித்துள்ளது.

சர்வதேச அளவில் வெளிநாட்டினரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. லண்டனும் பாரிசும் தான் சர்வதேச அளவில் பொருட்கள் விற்பனை, உணவகங்கள், பொது பூங்காக்களுக்கு புகழ்பெற்றுள்ளன.

பல்வேறு விஷயங்களில் முன்னணி இடங்களில் உள்ள பாரிஸ் மற்றும் லண்டன் அழுக்கான குப்பை மிகுந்த நகரங்கள் பட்டியலிலும் முதல் இரண்டு இடங்களை பிடித்துள்ளன. சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச் நகரம் தான் உலகிலேயே சுத்தமான நகரம் என்ற முதலிடத்தை பிடித்துள்ளது.

ஆனால் இந் நகரத்தில் பொழுதுபோக்கு அம்சம் மிகக்குறைவு. சுத்தமான நகரங்கள் பட்டியலில் கோபென்ஹாகன் ,ஸ்டாக்கோம் நகரங்கள் அடுத்த இடங்களை பிடித்துள்ளன. பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகமுள்ள நகரங்களில் பிரசெல்ஸ் முதலிடத்தை பிடித்துள்ளது. (அ-5)

# ஆசியா நோக்கி திரும்பும் உலகின் கவனம்

கொசோவா மேற்கொண்ட சுதந்திரப் பிரகடனம் தொடர்பான ஆரவாரங்கள் அடங்குவதற்கு இடையில் மேற்குலகம் தமது நேட்டோ கூட்டணியில் பல்கன் நாடுகளில் மூன்றை இணைத்துக் கொள்வதற்கான அடுத்தகட்ட முயற்சிகளில் இறங்கியுள்ளன.

அல்பேனியா, குறோசியா மற்றும் மசிடோனியா ஆகிய நாடுகளை நேட்டோ கூட்டணியில் இணைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கொசோவாவின் சுதந்திரத்துடன் பல்கன் பிராந்தியத்தில் ஏறத்தாள முடிவுக்கு வரும் மேற்குலகத்தின் பூகோள அரசியல் தற்போது ஆசியக் கண்டத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது.



இந்தியாவுக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை வரவேற்கும் இந்திய இராணுவத் தளபதி

சீனாவின் அதிகாரத்தின் கீழிருந்து வரும் தாய்வான் தன்னை ஒரு முழுமையான சுதந்திர நாடாக ஐ.நா.வின் உதவியுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி பிரகடனப்படுத்தலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன.

பசுபிக் கடலின் எல்லையில் அமைந்துள்ள இந்த சிறிய தீவுக்கு அமெரிக்காவினதும், மேற்குலகத்தினதும் ஆதரவுகள் எப்போதும் உண்டு.சீனா இதனை வன்மையாக எதிர்க்கின்றபோதும் அந்த எதிர்ப்பின் தாக்கம் எந்தளவிற்கு இருக்கும் என்பதை கொசோவாவின் சுதந்திரப் பிரகடனத்தின்போது ரஷ்யா காட்டிய எதிர்ப்பில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

சீனாவின் 'ஒரே சீனா' என்ற தத்துவம் பல சீனாக்களை உருவாக்கவே வழிவகுக்கும் என கடந்த ஆண்டு ஆசியாவின் முன்னணி ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தாய்வானின் அதிபர் சென் சூய்-பியான்ஸ் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் தாய்வானின் இந்த நகர்வை மிக அதிகளவில் எதிர்க்கும் நாடாக இலங்கை மாறியுள்ளமை கவனிக்கத்தக்கது. தாய்வான் ஒரு பூரண சுதந்திர நாடாக தன்னை ஐ.நா.வில் பிரகடனப்படுத்திக் கொள்வதைத் தாம் எதிர்ப்பதாகவும், ஒரே சீனா என்ற சீனாவின் கொள்கையைத் தாம் ஆதரிப்பதாகவும் இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு சீனா அதிகம் இராணுவ ஒத்துழைப்புக்களை வழங்கி வரும் நாடு என்பது ஒருபுறம் இருக்க, பல்கன் பிராந்தியத்தில் மேற்குல்கம் கடைப்படித்து வந்த பிரித்து சேர்க்கும் உத்திகள் ஆசிய கண்டத்திற்கும் பரவும் அபாயம் உள்ளதை இலங்கை தற்போது வலுவாக உணர ஆரம்பித்துள்ளது. அதுதான் வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையின் பிரதான காரணம்.

கொசோவாவின் நிலை தொடர்பாக உலகில் ஏற்பட்ட இரு எதிரெதிர் முனைவுகள் போன்ற அழுத்தமான முனைவாக்கம் தாய்வான் விடயத்திலும் உண்டு. எனவே அதனை எதிர்ப்பது என்பது கடினமானது. பலம் கொண்ட நாடுகளை அல்லது அவற்றிற்கு துணைபோகும் தேசங்களை சிறிய தேசங்களாக உடைப்பதன் மூலம் தமக்கு சார்பான சில நாடுகளையாவது அந்த பிராந்தியங்களில் உருவாக்க முடியும் என்பது மேற்குலகத்தின் தற்போதைய புதிய தத்துவம்.

அதற்கேற்ப அது மெல்ல மெல்ல காய்களை நகர்த்தி வருகின்றது.

மேற்குலகத்தின் இந்த அணுகுமுறையானது உலக வரைபடத்தில் அண்மையில் பல மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளதை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

எனினும் உலகத்தில் ஏற்பட்டுவரும் இந்த முனைவாக்கம் இலங்கையின் நிலை தொடர்பாக இதுவரை தோன்றவில்லை. எனினும் அதற்கான தூரமும் அதிகம் இல்லை என்பதைத்தான் நடக்கும் சம்பவங்கள் மறைமுகமாக சுட்டிக்காட்டுகின்றன.

உலகிலேயே மிகவும் மோசமாக மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளின் முதல் வரிசையில் இலங்கை உள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பான யு.என்.எச்.சி.ஆர் ஜெனிவாவில் நடத்திய கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நகர்வுகளும் இலங்கை அரசிற்கு சாதகமானதாக இல்லை.

இதேவேளை பல மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமது நிலைகளை வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றன.

ஆனால் இந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுமா என்பது இன்றுவரை நிச்சயமற்றதாகவே உள்ளது.

மேற்குலகத்தை முற்றாக புறம் தள்ளி தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியாவே முற்று முழுதாக களமிறங்கியுள்ளதாகவும், அதன் உச்சக்கட்டமாகவே இலங்கையின் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு இந்தியா அதிக முக்கியத்துவம் கொடுத்து வரவேற்றுள்ளதாகவும் கருத்துப்பட விடுதலைப்புலிகள் அண்மையில் கடுமையான அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அதாவது இந்தியாவின் நடவடிக்கைகளை நேரடியாகக் கண்டிக்கும் நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துள்ளதையே அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

உலகிலேயே மிக மோசமான மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணியில் உள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

மேலும் இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களில் படையினரின் பங்குகளும் உண்டு எனவும் அவர்கள் தெரிவித்து வரும் வேளையில் படை அதிகரி ஒருவருக்கு இந்தியா அதிக கௌரவம் கொடுத்து வரவேற்றுள்ளது பலரையும் ஆச்சரியமடைய வைத்துள்ளது.

மேலும் பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் உலகின் முன்னணி வங்கிகளிடம் இருந்து கடந்த ஆண்டு இலங்கை அரசு பெற்றுக்கொண்ட 500 மில்லியன் டொலர் கடன் தொகைக்கு இணையான தொகையை படைத்துறை கடன் உதவியாக வழங்க ரஷ்யா முன்வந்துள்ளதும் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்தியாவின் அனுசரணையுடன்தான் ரஷ்யா களமிறங்கியுள்ளதா என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

மேற்குலகத்தினதும், பிராந்திய வல்லரசுகளினதும் இந்த இழுபறிகளுக்கு இடையில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை நோக்கி படை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதுடன், அவர்களின் பிரதிநிதிகளும் திட்டமிட்ட வகையில் குறிவைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த தொடர் நடவடிக்கைகளில் அண்மையில் இலக்கு வைக்கப்பட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஆவார். போர் தீவிரமடைந்த இரு வருடகாலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட நான்காவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.

2005 ஆம் ஆண்டு நத்தார்தின ஆராதனையின்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் இலங்கையில் தமிழ் மக்கள் கடத்தப்படுவது, படுகொலை செய்யப்படுவது தொடர்பாக கடுமையாக விமர்சித்து வந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களில் மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள், படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை வெளிப்படையாக தெரிவிக்கப் போவதாக கூறி வந்த ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இந்த ஆண்டின் புதுவருட தினத்தன்று பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்குள் வைத்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் தற்போது மீண்டும் மற்றுமொரு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவநேசன் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

ஓமந்தையில் வழமையான சோதனை நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு மதியம் 12.30 மணியளவில் வன்னிக்கு பயணத்தை ஆரம்பத்த சிவநேசன் கனகராயன்குளத்திற்கு அண்மையில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இத் தாக்குதலில் அவரின் வாகனசாரதியும் கொல்லப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை இராணுவத்தின் ஆழஊடுருவும் சிறப்புப் படையினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளினுள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தி வருவதுடன், பல தடவைகள் முயற்சிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். இந்த தாக்குதல்களில் பெருமளவில் பொதுமக்களும், பள்ளிச்சிறுவர் களும் கொல்லப்பட்டு வருவதும் தெரிந்தவையே.

கடந்த ஆண்டும் கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு திரும்பக் கொண்டிருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது கிளைமோர் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அவர்களின் குறி தப்பி விட்டது.

இவை தவிர வவுனியா மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பனர் கிசோர், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பனர் ஜெயானந்த மூர்த்தி ஆகியோர் மீதும் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் ஜெயானந்தமூர்த்தியின் இல்லத்தின் மீது ஆர்.பி.ஜி தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த படுகொலைகளின் முக்கிய நோக்கங்கள் இரண்டாகவே இருக்க முடியும். ஒன்று தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வருபவர்களின் குரல்வளையை நெரிப்பது.

இரண்டாவது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அவர்களின் முக்கிய தளபதிகளையோ அல்லது தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகளையோ குறிவைப்பதன் மூலம் தென்னிலங்கையில் போர் தொடர்பான ஒரு நம்பிக்கை அலையை ஏற்படுத்த முயல்வுதாகும்.

ஆனால் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்து சர்வதேச சமூகமோ அல்லது உலகின் ஜனநாயகநாடு என தன்னைத் தம்பட்டம் அடித்துவரும் இந்தியாவோ அதிக முக்கியத்துவம் கொடுக்க முயலாதது வருத்தமானதே.

இதனிடையே மன்னார் கள முனையில் மோதல்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அடம்பன் பகுதியை நோக்கி 58 ஆவது படையணி மூன்று முனைகளிலும், மடுவை குறிவைத்து 57 ஆவது படையணி மூன்று முனைகளிலும் நகர்வை மேற்கொண்டு வருகின்றன.

செறிவான பீரங்கி, பல்குழல் உந்துகணை செலுத்தி தாக்குதல்கள் மற்றும் வான் தாக்குதல்களுடன் நடைபெற்று வரும் இந்த படை முன்நகர்வுகளை எதிர்த்து விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் கீரி சுட்டான் மற்றும் பாலைக்குழி ஆகிய பகுதிகளில் நடந்த மோதல்களில் 60 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும், பெருமளவானோர் காயமடைந்துள்ளதாகவும் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

மேலும் மன்னார் களமுனைகளில் விடுத

**வேல்ஸில் இருந்து அருஷ்**


லைப்புலிகளின் பாதுகாப்பு நிலைகளை ஊடறுத்து நகர முற்பட்ட இராணுவத்தினரும், சிறப்பு படையினரும் தமது பொறி வெடிகளில் சிக்கி பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் படைத்தரப்பு எதுவும் தெரிவிக்காத போதும், விடுதலைப்புலிகளின் பொறிவெடியில் சிக்கி லெப்.கேணல் கீர்த்தி ரணவக்க கொல்லப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இவர் களத்தில் மிகவும் திறமையாக செயற்பட்ட படை அதிகாரிகளில் ஒருவர் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் கவசத்தாக்குதல்படை பிரிவை சேர்ந்த ரணவக்க மன்னார் களமுனைகளில் காயமடையும் படையினரை துருப்புக் காவி கவச வாகனங்களின் உதவியுடன் அகற்றும் நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றி வந்தது குறிப்படத்தக்கது.

இறக்கும் போது மேஜர் தரத்தில் இருந்த ரணவக்க பின்னர் லெப். கேணலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இது ஒரு குறுகிய போராக இருக்கப் போவதில்லை என்பதை வடபோர் முனை உணர்த்தி வருவதுடன், ஆசிய பிராந்தியத்தை நோக்கி திரும்பும் உலகின் கவனம், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே பல சரிவுகளை சந்தித்து



விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியினர்.

வரும் உலக பொருளாதாரம் என எல்லா காரணிகளும் அரசின் திட்டங்களுக்கு அனுகூலமானதாக இல்லை.


இந்த நிலையில், பூகோள அரசியலுக்காக உலக ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் மேற்குலகமும், பிராந்திய வல்லரசுகளாக தம்மை தக்கவைக்க முயலும் ஆசிய நாடுகளும் ஒன்றாக இணைந்து தமிழ் இனத்தை முற்றாகப் புறம்தள்ள முயலுமா என்ற புதிருக்கான பதில் வெளிவரும் காலம் அதிக தூரமில்லை.

-நன்றி வீரகேசரி

# 'சென்னை சுப்பர் கிங்ஸ்' அணியின் விளம்பர தூதுவராக நடிகர் விஜய்

(சென்னை)

இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் விளையாடப்போகும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் விளம்பர தூதுவராக தான் நியமிக்கப்பட்டிருப்பதை பெருமையாக கருதுவதாகவு அணிக்கு முழு ஆதரவு தருவேன் என்றும் நடிகர் விஜய் கூறியுள்ளார்.



கிரிக்கெற் போட்டிகளை வளர்க்கும் விதமாக இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபை இந்தியன் பிரிமியர் லீக்கை உருவாக்கியது. இதில் 8 அணிகள் உருவாக்கப்பட்டு அவை பல்வேறு நபர்களால் பல கோடி ரூபாய் கொடுத்து வாங்கப்பட்டது.

கொல்கத்தா அணியை நடிகர் ஷாருக் கானும் பஞ்சாப் அணியை நடிகை ப்ரீத்திஜிந் தாவும் மும்பை அணியை தொழிலதிபர் முகேஷ் அம்பானியும் வாங்கினர். சென்னை அணியை இந்திய சிமெண்ட்ஸ் நிறுவனம் பலகோடி ரூபாய் கொடுத்து வாங்கியது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு நடைபெற்றவிழாவில்சென்னை அணிக்குசென்னை சுப்பர் கிங்ஸ் என்று பெயர் சூட்டப்பட்டு அணியின் லோகோ அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்று சென்னையில் நடைபெற்ற விழாவில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் விளம்பர தூதுவர்களை நியமிப்பது நடைபெற்றது.

விளம்பர தூதுவர்களாக நடிகர் விஜயும் நடிகை நயன்தாராவும் செயல்படுவார்கள் என இந்திய சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் செயல் அதிபர் ரகுபதி தெரிவித்தார்.

விழாவில் விஜய் பேசியதாவது, சமீப காலமாக கிரிக்கெற்றின் தீவிர ரசிகனாக நான் மாறி வருகிறேன். இந்தியா ஆடும் போட்டிகளில் வெற்றிதோல்வியை மட்டும் கேட்டுக் கொண்டிருந்த நான் தற்போது எந்த வேலையாக இருந்தாலும் அதனை ஒத்திவைத்து விட்டு போட்டிகளை ஆர்வமுடன் பார்த்து வருகிறேன்.

இந்த நேரத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் விளம்பர தூதுவராக இருக்க முடியுமா என என்னை கேட்டபோது நான் தமிழன் என்ற முறையில் சென்னை அணியை ஆதரிப்பது இயற்கையான ஒன்று. முழு மூச்சுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு நான் ஆதரவு தெரிவிப்பேன்.

ஐபிஎல்லின் முதல் போட்டியின் போது அதில் நான் கலந்துகொண்டு ஆட்டத்தை பார்ப்பேன்.சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு விளம்பர தூதுவராக இருப்பதை நான் பெருமையாக கருதுகிறேன் இவ்வாறு விஜய் பேசினார். (5)

# பாகிஸ்தானில் பாதுகாப்பு அபாயம் மினி உலகக் கோப்பைத் தொடர் இலங்கைக்கு மாற்றப்படலாம் !

(கராச்சி)

பாதுகாப்பு பிரச்சினை காரணமாக அவுஸ்திரேலிய தொடர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெற் சபைக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. வரும் செப்ரெம்பரில் இங்கு நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த 'மினி உலக கோப்பை' தொடரும் இலங்கைக்கு மாற்றப் படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி இம்மாத இறுதியில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பங்கேற்பதாக இருந்தது. சமீபத்தில் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் படுகொலை செய்யப் பட்டதை அடுத்து அவுஸ்திரேலியா இத்தொடரில் பங்கேற்க தயக்கம் காட்டியது. இந்நிலையில் பாகிஸ்தானுக்கான அவுஸ்திரேலிய தூதர் தொடரை கைவிடும்படி கூறியதை அடுத்து தொடரை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபை கேட்டுக் கொண்டது. இதை பாகிஸ்தான் கிரிக்கெற்சபை (பி.சி.பி.) ஏற்க மறுத்துவிட்டது. இதனால் இத்தொடர் நடக்குமா என்ற சந்தேகம் எழுந்தது.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் குண்டு வெடிப்பு நடந்தது. இதனால் பாகிஸ்தானில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறுவதாக இருந்த மினி உலக கோப்பை தொடர் இலங்கைக்கு மாற்றப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து தற்போது டுபாயில் நடந்து வரும் ஐ.சி.சி.நிர்வாகிகள் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து ஐ.சி.சி. அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியில்,

வெளிநாட்டினர் மீது குறிவைத்து தான் இஸ்லாமாபாத் குண்டுவெடிப்பு நடந்துள்ளது. இதனால் மற்ற அணிகள் இங்கு போட்டிகளில் பங்கேற்க தயக்கம் காட்டலாம். அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் தொடரை ரத்து செய்யப் போவதாக அறிவித்திருப்பது சரியென்பதை தான் இது நிரூபித்துள்ளது. மினி உலக கோப்பை செப்ரெம்பரில் நடப்ப தால் இப்போதுள்ள சூழ்நிலையை வைத்து தொடரை ரத்து செய்யமுடியாது.

இருந்தாலும் பாகிஸ்தானில் அன்னிய வீரர்களுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் மற்ற அணியினரின் நம்பிக்கையை பெற பி.சி.பி. முயற்சிக்க வேண்டும். இல்லையென்றால் இத் தொடர் இலங்கைக்கு மாற்றப்படும். போட்டிக்கான வேலைகளை கவனிக்க இலங்கை கிரிக்கெற்சபைக்கு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களாவது தேவைப்படும் என்பதால் பி.சி.பி. நிலைமையை விரைவில் சீராக்க வேண்டும்.

பாதுகாப்பு அற்ற சூழ்நிலைகள் தொடர்ந்தால் பாகிஸ்தானில் எதிர்காலத்தில் போட்டிகள் நடப்பது கேள்வி குறியாகிவிடும் இவ்வாறு அவர் தெரிவித்தார். (5)

# மேற்கிந்திய தீவில் டெஸ்ட் வென்றதில்லை என்ற வரலாற்றை மாற்றியமைப்போம்

## மஹேல ஜெயவர்தனா சவால்

(கயானா)

மேற்கிந்திய தீவுகள் அணியுடனான டெஸ்ட் தொடரில் இளம் வீரர்கள் அடங்கிய இலங்கை அணி வெற்றி பெறும் என அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் கூறியதாவது,

இலங்கை அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள் ளது. இளம் வீரர்கள் தேர்வு செய் யப்பட்டுள் ளனர். இந்த அருமையான வாய்ப்பை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆறு வேகப்பந்துவீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளதால், மேற்கிந்திய தீவுகளுட னான தொடரில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அனுபவ வீரர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து சரியான முறையில் பங்களித்தால் வெற்றி நிச்சயம்.

சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் இருவரின் பந்துவீச்சு மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களுக்கு சவாலாக இருக்கும். இங்கு இதுவரை டெஸ்டில் வென்றதில்லை என்ற வரலாற்றை மாற்றியமைப்போம். இவ்வாறு ஜெயவர்தன கூறினார். (5)


# சானியா அபார வெற்றி

(இண்டியன் வேல்ஸ்)

அமெரிக்காவில் நடக்கும் பசிபிக் லைப் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் விளையாட இந்தியாவின் சானியா மிர்சா தகுதி பெற்றார். இண்டியன் வேல்சில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று போட்டியில் இஸ்ரேல் வீராங்கனை ஷாகர் பீயர் (18ஆவது தரம்) உடன் சானியா மிர்சா மோதினார்.

மிகவும் பரபரப்பாக அமைந்த முதல் செட் ஆட்டம் டைபிரேக்கர் வரை நீடித்தது. கடுமையாகப் போராடிய சானியா 6-7 (7) என்ற கணக்கில் முதல் செட்டை இழந்தார்.

இரு வீராங்கனைகளும் தங்கள் சேர் வீசில் வெற்றிப் புள்ளிகளைக் குவித்த தால், 2ஆவது செட்டும் இழுபறியாக அமைந்தது. பதற்றம் அடையாமல் அபாரமாக விளையாடிய சானியா 7-5 என்ற கணக்கில் 2ஆவது செட் ஆட்டத்தை கைப்பற்றினார்.



இதனால் 3ஆவது செட்டில் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சானியா 6-7 (7), 7-5, 6-3 என்ற கணக்கில் வென்று காலிறுதிக்கு முந்தய சுற்றுக்கு முன்னேறினார். நான்காவது சுற்றில் உலகின் 8ஆவது தர வீராங்கனை டேனியலா ஹன்ட்சோவா (ஸ்லோ வாக்கியா) உடன் சானியா மோதுகிறார். (5)

# தென்னாபிரிக்காவுடனான முதலிரண்டு டெஸ்ட்களுக்கான இந்திய அணி அறிவிப்பு

## கங்குலி, டிராவிட் உள்ளே; இஷாந்த், காம்பீர் வெளியே

(பெங்களூர்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் கங்குலி, டிராவிட், லட்ஸ்மண் ஆகியோர் மீண்டும் இடம்பிடித்துள்ளனர். அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் சிறப்பாக செயல்பட்ட இஷாந்த் சர்மா, கௌதம் காம்பீர் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.



சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்குமிடையேயான முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் எதிர்வரும் 26ஆம் திகதியும், 2ஆவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் ஏப்ரல் 3ஆம் திகதியும், 3ஆவது டெஸ்ட் போட்டி கான்பூரில் ஏப்ரல் 11 ஆம் திகதியும் ஆரம்பமாகிறது.

### இந்திய அணி அறிவிப்பு

இதில் முதல் 2 போட்டிக்கான இந்திய அணி தேர்வு பெங்களூரில் நேற்று முன் தினம் நடந்தது. தேர்வு குழு தலைவர் வெங்சர்கார் தலைமையிலான தேர்வுக்குழுவினர் கூடி ஆலோசித்து அணி வீரர்களை தேர்வு செய்தனர். பயிற்சியாளர் ஹரி கிர்ஸ்டனும் இந்த கூட்டத்தில் பங்கேற்றார்.

பின்னர் முதல் 2 டெஸ்ட் போட்டிக்கான 14 பேர் கொண்ட இந்திய அணி இந்திய கிரிக்கெற் சபை செயலாளர் நிரஞ்சன்ஷா அறிவித்தார்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் பந்து வீச்சில் கலக்கிய வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா கைவிரலில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருவதால் அணியில் சேர்க்கப்படவில்லை. அவஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த (10 ஆட்டத்தில் 440) துடுப்பாட்ட வீரர் கௌதம் காம்பீர் அத் தேர்வில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

போர்மில் இல்லாத ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வசிம் ஜாபர் மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சேவாக் ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர். மூத்த வீரர்களான கங்குலி, டிராவிட், வி.வி.எஸ்.லட்ஸ்மண் ஆகியோர் எதிர்பார்த்தபடி அணிக்கு திரும்பி உள்ளனர். காயம் அடைந்து இருப்பதாக கூறப்பட்ட சுழற் பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், யுவராஜ்சிங் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் வருமாறு,

கும்ளே(அணித்தலைவர்) தோனி (துணைத் தலைவர். டெண்டுல்கர், சேவாக், வசிம், ஜாபர், டிராவிட், கங்குலி, லட்சுமண் யுவராஜ்சிங், இர்பான் பதான், ஹர்பஜன்சிங், ஆர்.பி.சிங். ஸ்ரீசாந்த், முரளிகார்த்திக். (5)

# ஐ.சி.சி.தலைமை நிர்வாகியாக பட்டேல்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெற் சபையின் (ஐ.சி.சி.) செயற்குழு கூட்டம் டுபாயில் நேற்று முன் தினம் ஆரம்பமாகியது. நேற்றுவரை நடைபெற்ற இக் கூட்டத்தில் முதல்நாள் ஐ.சி.சி. யின் அடுத்த தலைமை நிர்வாகி தேர்வு செய்யப்பட்டார்.

இந்த பதவிக்கு இந்திய கிரிக் கெற்சபை நிர்வாகி பிந்த்ரா மற்றும் தென்னாபிரிக்க கிரிக் கெற்சபை இயக்குனர் இம்தியாஸ் பட்டேல் ஆகியோர் பெயர் அடிபட்டது. இதில் தென்னாபிரிக்காவை சேர்ந்த இம்தியாஸ் பட்டேல் ஐ. சி. சி. தலைமை நிர்வாகி பதவிக்கு தேர்வானார்.

இவர் இந்திய வம்சாவழியை சேர்ந்தவர் ஆவார். பிந்த்ராவுக்கு முதன்மை ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தலைமை நிர்வர்கியான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மல்கம் ஸ்பீடு ஜூன் மாதத்தில் ஓய்வுபெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

முன்யோசனை இல்லாதவன் வெளியே வருவதற்கு வழியைத் தெரிந்து கொள்ளாமலே உள் நுழைவான்.

—அரேபியா

வலம்புரி

## சர்வதேசத்தின் அழுத்தத்தை இலங்கை அரசு விரைவில் அனுபவிக்கும்

இலங்கையின் கௌரவம் உலக அரங்கில் மிக மோசமாக பிசிங்கிப் போயுள்ளது.

மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கை அரசை உலக நாடுகளும், பொது அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்து வருகின்றன. எனினும் இலங்கை அரசு அது விடயத்தில் அக்கறை கொள்ளாமல் செயற்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறப்படவில்லை என்பது அரசின் வாதமாக இருக்கும் அதே வேளை தற்போது இலங்கையில் மீறப்படும் மனித உரிமை விடயத்தில் அமெரிக்கா தலையிடத் தொடங்கியுள்ளமை, இலங்கை அரசுக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

இலங்கையின் தற்போதைய அரசு மட்டுமன்றி முன்னைய அரசுகளும் தமிழர் விடயத்தில் ஓர் தவறான கொள்கையையே கொண்டுள்ளன.

அதாவது தமிழர்கள் ஆளப்படவேண்டியவர்கள் அவர்கள் சிறுபான்மை சார்ந்த இனத்தினர். எனவே அவர்களுக்கு ஆளும் உரிமை இல்லை. இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியது என்ற எண்ணப்பாடு அவர்களிடமிருந்து வருகிறது.

இதனாலேயே தமிழர்களுக்கு எதிரான சட்டங்களை அரசு அமுல் படுத்தி அவர்களின் மனித உரிமைகளை மீறி வருகின்றது.

இத்தகைய செயல்களை உலக நாடுகள் தற்போது பட்டவர்த்தனமாகப் புரிந்து கொண்டுள்ளன. இதன் காரணமாக உலக நாடுகள் இலங்கை அரசுக்குக் கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன.

ஆயினும் இலங்கை ஓர் வறிய நாடு- சிறிய நாடு என்பதால் இயல்பாக ஏற்படக் கூடிய இரக்கம், அனுதாபம் காரணமாக உலக நாடுகள் இலங்கை அரசின் நடவடிக்கைகளை சற்று விட்டுப் பிடிக்கின்றன.

இதனைத் தவறாக புரிந்து கொள்ளும் அரசு, உலக நாடுகளின் அமைதியான போக்கை பலவீனமாகவும் தான் ஓர் குட்டிச் சண்டித்தனக்காரன் போலும் நடந்து கொள்கிறது.

இந்த சிறுமைத்தனத்திற்கான விளைவை இலங்கை அரசு விரைவில் அனுபவிக்கப்போகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்கான அறிகுறிகளை நாம் இப்போது அவதானிக்க முடிகின்றது.

உலக நாடுகளின் கடுமையான நடவடிக்கைக்கு இலங்கை ஆளாகும்போது அதன் மறுபுறத்தில் இந்தியாவும் அவ் பெயரைப் பெற்றுக் கொள்ளும் பரிதாப நிலை ஏற்படும்.

அதாவது தற்போது இலங்கை அரசு மேற்கொண்டுவரும் யுத்த நடவடிக்கைக்கு இந்தியாவே தேவையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

இந்தியாவின் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே இலங்கை அரசு மனித உரிமை மீறல் விடயத்தில் கவனம் செலுத்தாமல் தான் நினைத்த [illegible]டில் செயற்படுகின்றது.

[illegible]ந்தியாவை மீறி யாரேனும் எங்களைக் [illegible]யாதென்னும் இலங்கை அரசின் [illegible]க விரைவில் உடையும். அப் [illegible]கை அரசு விளைவைப் புரிந்து

## தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை அரசியலமைப்புச் சபை உருவாக்கப்படாது

### பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க

(கொழும்பு)

17ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்வரை அரசியலமைப்புச் சபை நியமிக்கப்படமாட்டாது என பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சபை உரு வாக்கப்படாமல் இருப்பதற்கான காரணத்தைக் கூறுமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை அரசியலமைப்பச் சபையை நியமிப்பதில்லையென்ற தீர்மானத்தில் மாற்றமில்லையெனக் கூறினார்.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சபை 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதியுடன் காலவதியானது. இதனைத் தொடர்ந்து அரசியலமைப்புச் சபைக்கு 10ஆவது உறுப்பினரை நியமிக்க அரசாங்கம் முற்பட்ட போது அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலக்கிக்கொண்டது. அரசிலிருந்து விலகிய ஜே.வி.பி தாமும் சிறுபான்மைக் கட்சியெனக் கூறி 10ஆவது உறுப்பினரை நியமிக்கும் உரிமை தமக்கு இருப்பதாகக் கூறியது. இதனால் இழுபறி நிலை ஏற்பட்டது என்றார் பிரதமர்.

இதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த கரு ஜெயசூரிய தலைமையிலான குழுவினர் அரசாங்கத்தில் இணைந்து கொண்ட பின்னர் அரசியலமைப்புச் சபைக்குப் பிரதிநிதிகளை நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. பின்னர் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பலனாக அரசியலமைப்புத் தொடர்பாக ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரதிநிதியாக சொக்சி



நியமிக்கப்பட்டார். இந்தத் தெரிவுக்குழுவின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் அரசியலமைப்புச் சபை உருவாக்கப்படும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் மேலும் கூறினார். (அ-5)

## கல்விச் சமூகம் மக்களை நல்வழிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

### பரு.மாவட்ட நீதிபதி அரியநாயகம்

கல்விச் சமூகம் மக்களை நல்வழிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும். இன்றைய மாணவர்கள் அறிவு ஆற்றல்களால் மேம்பாட்டுச் சாதனைகள் படைக்கும்போது எதிர்காலம் சிறப்புறும். மக்கள் அமைதியான வாழ்க்கை வாழமுடியும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை மாவட். நீதிபதி க.அரியநாயகம் துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மெய் வன்மைப் போட்டியிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விளையாட்டுப் போட்டிக்குப் பாடசாலை அதிபர் எஸ்.செல்வராஜா தலைமை தாங்கினார். நீதிபதி அரியநாயகம் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

வடமராட்சி பிரதேசம் கல்வியில் புகழ் பெற்ற தனித்தன்மை வாய்ந்த பிரதேசம். கல்விமான்கள் இப்பிரதேச சமுதாயத்தை சிறப்பாகவழிநடத்திவந்திருக்கிறார்கள்.

ஆனால் இன்று அந்நிலை மாற்றமடைந்துள்ளது. இக்கிராமம் உட்பட அல்வாய் குடத்தனைக் கிராமங்களில் சமூக விரோத, சட்ட விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றிற்கு எதிராகக்கடும் நட்வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இக்கிராமங்களின் அபிவிருத்திகளைப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உதாசீனம் செய்யக் கூடாது. இக்கிராம அபிவிருத்திகளில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகப் பலத்த புகார்கள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலைகளே கிராமங்களின் சமூகச் சீரழிவுகள். சட்டவிரோத செயற்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவற்றினைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். இக்கிராமம் மிகப் பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றது.

மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் இன்னல் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இப் பாடசாலையின் அத்தியாவசிய தேவைகள் கூடப் பூர்த்தி செய்யப்படாமையினால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து வருவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரபட்சம் காட்டப்படுவதை அனுமதிக்க முடியாது. இப்பாடசாலையின் தேவைகள், குறைபாடுகள் பற்றி அதிபர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் உரையில் மிக விளக்கமாக எடுத்துக்கூறினர்.

ஆனால் அவர்களின் உரைக்குப் பதிலளித்து உரையாற்றிய வடமராட்சி வலய நிர்வாக உத்தியோகத்தரின் கூற்றுக்கள் எனக்குப் பேரதிர்ச்சியை ஊட்டியுள்ளது. இந்நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இவற்றிற்கு இடமளிக்கக் கூடாது. கல்விச் சமூகம் மக்களைச் சிறப்பாக வழிநடாத்தும் போதுதான் பல்வேறு அபிவிருத்திகளைக் காண முடியும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும். ஆசிரியர்களின் பணி தூய்மையானது. தூய்மையான அப்பணியினை அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் மேற்கொள்ள வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்களுக்கேற்ப மாணவர்கள் அறிவைப் பெற்று உயர்வடையும்போது அவர்களது வாழ்வு வளம் பெறமுடியும்.

கிராமங்களின் தேவைகள்பூர்த்தி செய்யப்படவேண்டும். தவறின் கிராமங்களில் சட்டவிரோத சமூகசீரழிவுகள் அதிகரிக்கும். கிராமங்களின் கல்வித்தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் நாட்டிற்கு உகந்த சிறந்த பிரஜைகளை உருவாக்குவதே எமது இலட்சியமாக இருக்கவேண்டும் எனக்கூறினார்.

போட்டியில் வள்ளுவர் இல்லம் 303 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், கம்பன் இல்லம் 264 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும் பெற்றன. விளையாட்டுகளில்வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கான பரிசில்களை விருந்தினர்கள் வழங்கினர். (அ-52)

## உண்மைக்காக வாழ்வோம்

'இந்த மனிதனை எனக்கு தெரியாது' தனது இருப்பைத் தக்கவைக்க இருப்பை தந்தவரையே இவ்வாறு மறுத்துரைத்தார் சீடரான பேதுரு. நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என இயேசுவை அறிக்கையிட்டு 'யாரிடம் போவோம் இறைவா! வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன' என்று அவரிலே தஞ்சமடைந்திருந்த பேதுரு அவரையே தெரியாது என்று மறுத்துரைக்கும் அளவுக்கு சுயநலம் வெற்றி கொண்டுவிட்டது.

### தவக்காலப் பொழிவு

ஒன்றாக வாழ்ந்து உண்டு உறவாடி மகிழ்தோரை உதவிகள் புரிந்தோரை மறுதலிக்கும் பேதுருக்கள் இன்றும் எம் மத்தியில் இல்லையா? வசதி வாய்ப்புகள் வரும் போது நடந்து வந்த பாதையை மறந்து விடுகின்றோம். கணவன் மனைவியை பிள்ளைகள் உறவுகளை மறுதலிக்கின்றோம். படிப்பில்லை, அழகில்லை என்றால் மறுதலிப்பு பிள்ளைகள் அடாவடி தீச் செயல் என்றால் பெற்றோர் மறுதலிப்பு பெற்றெடுத்த பிள்ளைகளே பெற்றோரை மறுதலிப்பு அநீதியை ஆதரித்து நீதியை மறுதலிப்பு. சந்தர்ப்பவாத சமய மறுதலிப்பு. பிறருக்கு இடயூறு விளைவித்து அன்பினை மறுதலிப்பது ஏன்? தன்னலத்தால் தன்னை தானே மறுதலிப்பு இவையனைத்தும் யேசுவுக்கு எதிரான மறுதலிப்புகளே.

நாம் இம்மையில் மறுதலித்தால் இறைவன் எம்மை விண்ணகத்தில் மறுதலிப்பார். எனவே எமது நிலையை எண்ணி மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம்.

மறுதலிப்பதைத் தவிர்த்து உண்



மைக்கும் நேர்மைக்கும் யேசுவின் அழைப்புக்கும் குரல் கொடுப்போம். அப்போது நன்று நன்று நம்பிக்கைக்குரிய ஊழியனே! என்று இறைவன் எம்மை ஏற்றுக்கொள்ளுவார் என நம்புவோம்.

எஸ்.யேசுதாஸ்

## மட்டு.உள்ளூராட்சி சபை உறுப்...

அமைப்பைச் சேர்ந்த 61 பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 17 பேரும் சுயேட்சைக் குழுவின் பெயரில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 22 பேரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 7 பேரும் இந் நிகழ்வில் பதவி ஏற்றனர்.

பதவி ஏற்பு நிகழ்வினைத் தொடர்ந்துஅங்கிருந்த தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடல்களை நடத்தினார். மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் அங்குள்ள 8 பிரதேச சபைகளுக்குத் தலா 25 இலட்சம் வீதம் 2 கோடி ரூபா நிதியை வழங்குவதாக இக் கலந்துரையாடல்களின்போது மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் தமது தேவைக்கு வாகனங்களைப் பயன்படுத்த என 10 இலட்சம் ரூபாவையும் வழங்குவதாகவும் அறிவித்தார். (ச-5)

## ஒரு இலட்சத்துக்கும்...

655 பேரும் காத்தான்குடிப் பிரிவில் 3 ஆயிரத்து 385 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 468 பேரும் ஓட்டாமாவடிப் பிரிவில் 840 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 657 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

24 ஆயிரத்து 801 குடும்பங்களைச் சேர்ந்த 95 ஆயிரத்து 868 பேர் இதில் அடங்குவர். இதேவேளை மண்முனை வடக்கு மண்முனை போரதீவுப்பற்று, மண்முனை தென் எருவில்பற்று, ஏறாவூர்பற்று ஆகிய பிரிவுகளில் ஆயிரத்து 836 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 250 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில்தங்கியுள்ளனர்.

மழை தொடர்ந்து பெய்கிறது. நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிபடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 60 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. மழை வெள்ளம் காரணமாக மக்கள் சொல்ல முடியாத அவல வாழ்வு வாழ்கின்றனர்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதாலும் வீதிகளில் வெள்ளம் பாய்வதாலும் மக்கள் பெரும் அவதியுறுகின்றனர். (ச-5)

## அமெரிக்...

கவச அங்கிகள், குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் புலன் விசாரணை செய்வதற்கான கருவிகள், சிறப்பு நடவடிக்கையின் போது அதிரடிப் படையினர் அணியும் கவச அங்கிகள் என்பன வழங்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கினால் இந்த உபகரணங்கள் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவிடமும் அதிரடிப்படை அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டன. (ச-5)

## நோர்வேத் தரப்பினர்...

வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது. அதேவேளை இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில், தொடர்ந்தும் வெளியாகும் தகவல்கள் குறித்துக் கவலையளிப்பதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து சுலோவேனியா வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் ஜோன்ஸ் பிரிமோரியா மேலும் கூறியதாவது,

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளில் ஒருவராக ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் தனது பணியினை ஆற்றிவரும். சமாதான முயற்சிகளின் அனுசரணைப் பணியாளர்களாக நோர்வேயும் ஏனைய இணைத் தல்லமை நாடுகளின் உறுப்பினர்களும் வன்னி செல்ல அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இது விடுதலைப்புலிகளிடம் அவர்கள் சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்பது தொடர்பில் தெரிவிக்க வேண்டிய செய்திப் பரிமாற்றத்துக்கு அவசியம் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் இலங்கையில் தேவையற்ற குற்றஞ்சாட்டுகளின்றி செயற்படுவதற்குரிய புறச்சூழல் ஏற்படுத்தப்படுவது அவசியம் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் வன்முறைச் சம்பவங்களின் போது பொதுமக்கள் பாதிக்கப்படுவதை சகல தரப்பினரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ச-5)

## கிழக்குப்...

வகித்தார்.

இரு மாகாணங்களும் பிரிக்கப்பட்ட பின்பு கிழக்கு மாகாண சபையின் பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராகவிருந்து அதன் பின்னர் வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்தார்.

கடந்த வாரம் ஜனாதிபதியால் கிழக்கு மாகாணப் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட வி.பி.பாலசிங்கம் நேற்று முன்தினம் தனது பதவியைப் பொறுப்பேற்றார். (ச-5)

## சனிக்கிழமை...

படைகளின் தலைமையகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதன்படி 2008.03.22 ஆம் திகதி இரவு 9 மணியிலிருந்து 23 ஆம் திகதி அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும். கிறிஸ்தவ பக்தர்களின் நலன் கருதியே ஊரடங்குச் சட்டத்தில் இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தள்ளாடி இராணுவ...

திற்குள் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தள்ளாடிப் படைத்தளம் விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்தபோது மன்னார் சவுத்பார் படைத்தளத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி கடுமையான எறிகணை வீச்சுத் தாக்குதல்கள் ஆரம்பமாகின. நேற்று அதிகாலை ஒரு மணிவரை இத் தாக்குதல்கள் தொடர்ந்தன என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மன்னார் மருத்துவமனைக்கு 14 படையினர் படுகாயங்களுடன் கொண்டு வரப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்கள் அனைவரும் நேற்றுக் காலை அநுராதபுரம் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-5)

## மன்னார்...

அதன் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், மன்னார் வளைகுடா முழுவதையும் கண்காணிக்கும் வகையில் புதிய ராடர் தொகுதிக்கு 8 அன்ரனாக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை மண்டபம் கரை யோரத்திற்கு அப்பால் இந்தியக் கடற்பரப்பில் கப்பல்கள், வள்ளங்கள், சிறிய படகுகள் என்ப வற்றை துல்லியமாகக் கண்டுபிடித்து அறிவிக்கும் ஆற்றல் மிக்கவை என்றார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தியக் கரையோரப் பாதுகாப்புக்காக 60 கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு பொலிஸ் பணிப்பாளர் நாயகம் பீ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ச-5)

## வடக்கைப் படையினர்...

அவர் மேலும் கூறியுள்ளதாவது, கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்குத் தேவையான அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

துப்பாக்கி முனையில் வாழ்வது ஜனநாயகம் ஆகாது. மக்களின் பிரச்சினைகளை ஜனநாயக வழியில் தீர்க்க வேண்டிய சூழ்நிலையை இன்று கிழக்கில் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

அதற்குப் பொறுமையும் திட்டமிடலும் மிக அவசியமானது. விடுதலைப்புலிகளிடமிருந்து கிழக்கை மீட்ட பின்னர் அந்தப் பிரதேசத்தின் முழு அதிகாரத்தையும் இன்று உங்களிடம் தந்திருக்கின்றோம்.

கிழக்கை நிர்வாகிக்கும் உரிமையை உங்களிடம் ஒப்படைப்போம் என்று எவரும் நினைத்திருக்க மாட்டார்கள். நீங்கள் கிழக்கிற்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்லர். நாடு முழுவதற்கும் நீங்கள் சொந்தமானவர்கள் என ஜனாதிபதி கூறினார்.

தென்பகுதியில் தேர்தல் நடைபெறும்போது வன்முறை இடம் பெறும். ஆனால் இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வன்முறை இடம்பெறாமை முக்கிய விடயமாகவுள்ளது.

கிழக்கில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை 600 கோடி ரூபா செலவில் அமுல்படுத்தத் திட்டமிட்டிருக்கின்றோம். இதேபோன்று வடக்கையும் மிக விரைவில் மீட்போம். அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்துவோம்.

ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் எப்படி சந்தோஷமாக உள்ளனரோ அதேபோன்று வடபகுதி மக்களும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்றார். (ச-5)


உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவி, கல்லூரியின் முன்னாள் நூலகர், ஆசிரியர்

திருமதி இரஞ்சிதமலர் அருளானந்தன்

Dip.in.Lib. & Inf.Sc.,B.A.,Dip.in Edu. (Distinction), M.Phil.in Edu.,

(ஆசிரியை,யாழ்/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,கரவெட்டி)

அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் முதுதத்துவமாணி (Master of Philosophy in Education) ப் பட்டத்தைப் பெற்றமை குறித்து பெரும் மகிழ்வுறும் நாம், ஆசிரியை அவர்கள் கல்விப் பணியில் மேலும் உயர்ந்து, சிறப்புற்று வாழ அவரின் பிறந்த நன்னாளில் (19.03.2008) இறைவனை வேண்டிப் பணிகின்றோம்.

அன்பிற்குரிய மாணவர்கள் மற்றும்
Dr.இ.சற்குருநாதன் குடும்பத்தினர்

(C-875)



யாழ்.பல்கலைக்கழக
கல்வியியல் பேராசான்
மா.சின்னத்தம்பி அவர்களின்

மணி விழா - அழைப்பு



தலைமை :- திரு.பொ.அருணகிரிநாதன்
(அதிபர் -வேலணை மத்திய கல்லூரி)
இடம்:- பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
(கொக்குவில் இந்துக் கல்லூரி)
காலம்:- 20.03.2008 வியாழக்கிழமை,
காலை - 9 மணி.

நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை :- திரு.அ.அகிலதாஸ்
(அதிபர்-கொக்குவில் இந்துக் கல்லூரி)
தலைமையுரை :-
வாழ்த்துரைகள் :-
திரு.க.கணேஷ்
(அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)
பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
(துணைவேந்தர் -யாழ்.பல்கலைக்கழகம்)
வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர்-யாழ்.பல்கலைக்கழகம்)
செல்வி சு.அருளானந்தம்
(தலைவர்-கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.வே.தி.செல்வரத்தினம்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்-யாழ்ப்பாணம்)
திருமதி அ.வேதநாயகம்
(வலயக் கல்விப் பணிப்பாளர்- யாழ்ப்பாணம்)
திரு.ப.விக்னேஸ்வரன்
(வலயக் கல்விப் பணிப்பாளர் - வலிகாமம்)
திரு.வை.செல்வராசா
(வலயக் கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி)
திரு.ஆ.ராஜேந்திரன்
(வலயக் கல்விப் பணிப்பாளர் - தீவகம்)
திரு.கு.பிறேமகாந்தன்
(வலயக் கல்விப் பணிப்பாளர்-தென்மராட்சி)
திரு.சோ.பத்மநாதன்
(ஓய்வு பெற்ற அதிபர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
திரு.அ.பஞ்சலிங்கம்
(ஓய்வு பெற்ற அதிபர்-யாழ்.இந்துக் கல்லூரி)
திரு.பொ.கமலநாதன்
(ஓய்வு பெற்ற அதிபர்-கொக்குவில் இந்துக் கல்லூரி)
திரு.த.காங்கேசபிள்ளை
(அதிபர்-பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
திரு.ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர்-கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
திரு.எஸ்.கே.யோகநாதன்
(பீடாதிபதி-தேசிய கல்வியியல் கல்லூரி,யாழ்ப்பாணம்)
திரு.வீ.கணேசராசா
(அதிபர் - யாழ்.இந்துக் கல்லூரி)
திரு.மு.கனகலிங்கம்
(அதிபர்-மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி.)
திரு.ப.திருஞானசம்பந்தன்
(ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

மணி விழா மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்
திரு.செ.சேதுராசா
(அதிபர் - நெல்லியடி ம.ம.வி.)
விழா நாயகர் கௌரவிப்பு
ஏற்புரை:- விழா நாயகர்
நன்றியுரை :- திரு.என்.விஜயசுந்தரம்
(ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கி…

– மணி வி…

(சி-879)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2008இல்…